E Paper

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2022 செப்டெம்பர் 24 சனிக்கிழமை

# தினகரன்


THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 226 | Saturday 24, September, 2022 | 12 பக்கங்கள் | 40/-

## அத்தியாவசிய பொருட்கள் பலவற்றின் விலைகள் குறைப்பு

**சதொசவில் நேற்று முதல் புதிய விலை**



லங்கா சதொச நிறுவனம் 05 வகையான அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்துள்ளது.

கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரையே

06

## மகாராணி ஒரு கிறிஸ்தவராக இருந்தும் பௌத்த மதத்திற்கு உரிய மதிப்பளித்தார்

**அனுதாபப் பிரேரணையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

எலிசபெத் மகாராணி ஒரு கிறிஸ்தவர் என்றபோதும் பௌத்த மதத்தை பாதுகாப்பதில் அவர் சிறப்பாக செயற்பட்டாரென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற எலிசபெத் மகாராணியின் அனுதாபப் பிரேரணையில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்துக்கு விஜயம் செய்ததுடன் சபையில் நேற்று நடைபெற்ற அமரத்துவமடைந்த எலிசபெத் மகாராணி தொடர்பான அனுதாபப் பிரேரணையிலும் கலந்து கொண்டு உரையாற்றினார்.

06

## பாடசாலை மாணவர்களுக்கு விரைவில் ஆரோக்கிய உணவு

**வேலைத்திட்டத்துக்கு ஏற்பாடு – அரசு அறிவிப்பு**



நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் முறையான உணவு வழங்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளமை உண்மையாகும். எனினும் விரைவில் பாடசாலை மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவை வழங்குவதற்கான

06

திருமலை திருக்கோணேஸ்வரர் ஆலயம்

## தொல்லியல் என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்படவில்லை

**சபையில் அமைச்சர் விதுர தெரிவிப்பு**



திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயம் தொல்லியல் என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுவதை அரசாங்கம் மறுத்துள்ளது. பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) உரையாற்றிய,

06

## கதிர்காமம் பிரதேச சபை நேற்று முதல் கலைப்பு

**ஆளுநர் முஸம்மில் அதிரடி தீர்மானம்**




கதிர்காமம் பிரதேச சபை நேற்று முதல் கலைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மிலின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 10ஆம் திகதி தற்காலிகமாக அந்த பிரதேச சபையின் செயற்பாடுகள்

06

# அமைச்சர்களது வெளிநாட்டு பயணங்களுக்கு கட்டுப்பாடு

## ஜனாதிபதி ரணிலின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் வெளிநாட்டு விஜயங்களை மட்டுப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் வெளிநாட்டு விஜயங்களை அத்தியாவசிய பணிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தவும் அவ்வாறான விஜயங்களில் பங்குபற்றுபவர்களை மிக அத்தியாவசியமான அதிகாரி அல்லது குழுவுக்கு மட்டுப்படுத்தவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவையின் பேச்சாளர் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் கடினமான பொருளாதார நிலைமைகளை கருத்தில் கொண்டு அரச செலவினங்களை குறைக்கும் நோக்கில் இந்தப் பிரேரணை ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ளது.



வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்குமிடையில் சந்திப்பொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 77ஆவது அமர்வை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு நிகழ்வில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனையும் அவரது பாரியார் ஜில் பைடனையும் அமைச்சர் அலி சப்ரி சந்தித்தார்.



## சாரதி அனுமதி பத்திரம் செல்லுபடி காலம் நீடிப்பு

**ஆலோசனை குழு கூட்டத்தில் அனுமதி**

03

அமைச்சர்கள் டக்ளஸ், நசீர் அஹமட் உட்பட

## தேசிய சபைக்கு 27 உறுப்பினர்கள் அரசாங்கத்தால் நேற்று நியமனம்

**07 தமிழர்கள், 05 முஸ்லிம்களும் நியமிப்பு**



**லோரன்ஸ் செல்வநாயகம்**


நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் வகையில் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ள சபாநாயகர் தலைமையிலான தேசிய சபையில் 07 தமிழர்களும் 5 முஸ்லிம்களும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர்

06

## நிலக்கரி இறக்குமதியை தடுக்க சதித் திட்டம்

**மின்வெட்டு நேரத்தை நீடிக்கவும் முயற்சி**



இலங்கைக்கு உரிய நேரத்தில் நிலக்கரி இறக்குமதி செய்வதை தடுக்கும் சதி நடப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த நேரத்தில் நிலக்கரி விநியோகத்தை மறுப்பதற்கும் மின்வெட்டை நீடிப்பதற்கும் சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாகவும் அவர் செய்தியாளர்களிடம் நேற்று

06

## மின் கட்டணத்தை செலுத்த மத ஸ்தலங்களுக்கு நிவாரண திட்டம்

**நீண்ட கால அடிப்படையில் வழங்க அரசு முடிவு**



இலங்கை மின்சாரசபையினால் மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து , மத வழிபாட்டுத் தலங்கள் மின் கட்டணத்தை செலுத்துவதில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளமை தொடர்பில் அமைச்சரவையில் அவதானம் செலுத்தப்பட்டது.

அதற்கமைய சகல மத வழிபாட்டு தலங்களுக்கும் மின் கட்டணத்தை செலுத்துவதற்கான நீண்ட கால நிவாரண திட்டமொன்றை

06

## வெளிநாட்டு பெண் மீது பாலியல் துன்புறுத்தல்

**யாழ். காரைநகரில் 10 பேர் அதிரடி கைது**




யாழ்ப்பாணம் காரைநகர் கசூரினா சுற்றுலா கடற்கரை பகுதியில் ஸ்பெயின் நாட்டு பெண்ணை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 10 பேர் ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் அனைவரும் போதையில் இருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காரைநகர் கசூரினா கடற்கரைக்கு ஸ்பெயின் நாட்டு பெண் ஒருவர் சுற்றுலா வந்திருந்த போது அங்கு

06

## திரிபோஷவில் எந்தவித நச்சுத் தன்மையும் இல்லை

**திரிபோஷ நிறுவனம் உறுதிபட தெரிவிப்பு**



நாட்டில் விநியோகிக்கப்படும் திரிபோஷ தயாரிப்புகளில் பரிந்துரைக்கப்பட்ட அளவை விட அஃப்லாடாக்சின் இரசாயனம் இல்லை என ஸ்ரீலங்கா திரிபோஷா நிறுவனம் தெரிவித்துள்ளது.

திரிபோஷவின் தரம் குறித்து எந்த சந்தேகமும் வேண்டாம் என்றும் திரிபோஷ உட்கொள்வது பாதுகாப்பானது என்றும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.

06

## கோதுமை மாவின் விலை குறைவடையும் சாத்தியம்

**ஒரு தொகுதி துறைமுகத்தை வந்தடைந்தது**




கோதுமை மாவின் விலை அடுத்த வாரம் முதல் குறைவடையக் கூடும் என தெரிவிக்கப்படுகின்றது.

சந்தையில் கோதுமை மாவின் விலை கடுமையான உயர்வினை எட்டியுள்ளதாலும், கோதுமை மா பற்றாக்குறையினாலும் பொது மக்கள் மற்றும் பேக்கரி தொழிற்துறையுடன் ஈடுபடுவோர் கடுமையான பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். இந்த நிலையில் முன்பதிவு செய்யப்பட்ட கோதுமை மா துறைமுகத்திற்கு வந்துள்ளதன் காரணமாக

06

மனித உரிமைகள் பேரவையில்

## இலங்கை தொடர்பான தீர்மானம் சமர்ப்பிப்பு



சர்வதேச மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான பிரேரணையை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பித்துள்ளார். 51வது மனித உரிமைகள் கூட்டத்தொடருடன் இணைந்து இலங்கை தொடர்பான பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. இதனால், இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொருளாதார நெருக்கடி, உணவுப் பாதுகாப்பு, உணவு, மருந்து மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தெஹிவளை மிருகக்காட்சிசாலையில்

## 79 வயது யானை நேற்று உயிரிழப்பு



தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையில் இருந்த 'பந்துல' என்ற யானை உயிரிழந்துள்ளது. உடல்நலக்குறைவுதான் இதற்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த யானை திடீரென தரையில் வீழ்ந்ததையடுத்து, கால்நடை மருத்துவர்கள் யானைக்கு சிகிச்சையளித்துள்ளனர். இதன்போது யானை ஏற்கனவே இறந்துவிட்டதாக

06

## வசந்த முதலிகேயின் மனு விசாரணை ஒக்.18 இல்

**உயர்நீதிமன்றம் நேற்று அறிவிப்பு**



பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள போராட்டக்கள செயற்பாட்டாளர்களான அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அழைப்பாளர் வசந்த முதலிகே உட்பட்ட மூவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுக்களை விசாரணை செய்ய உயர் நீதிமன்றம் திகதியை அறிவித்துள்ளது.

06

## காத்தான்குடியில் மூன்று உணவகங்களுக்கு சீல்

**சுகாதார சீர்கேடு காரணமாம்**



காத்தான்குடி பிரதேசத்தில் உணவு தயாரிப்பில் ஈடுபடும் ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், பேக்கரிகளின் உணவு தயாரிக்கும் இடங்களில் நேற்று முன்தினம் (22) திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது பேக்கரி உள்ளிட்ட மூன்று உணவகங்களுக்கு சீல் வைக்கப்பட்டது. சில ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள்,

06

துமிந்த விடுதலை விவகாரம்:

## வழக்கு விசாரணை நவ.17க்கு ஒத்திவைப்பு



பாரத லக்ஷ்மன் பிரேமசந்ர கொலை வழக்கில் குற்றவாளியென தீர்ப்பாகி சிறையிலடைக்கப்பட்ட துமிந்த சில்வாவை ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யுமாறு அப்போதய ஜனாதிபதி பிறப்பித்த உத்தரவை இரத்துச் செய்யுமாறு கோரி உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணை

06

## நுரைச்சோலையில் 46 மில். பெறுமதியான கஞ்சா மீட்பு

**இரு சந்தேக நபர்கள் கைது; வாகனங்களும் கைப்பற்றல்**



சுமார் 46 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான கேரளா கஞ்சா பொதிகளை கற்பிட்டி நுரைச்சோலை பகுதியில்

06

# சர்வதேச செய்திகள்

## சிரியாவில் தஞ்சப் படகு மூழ்கியதில் 61 பேர் பலி

லெபனானில் இருந்து தஞ்சக்கோரிக்கையாளர்களை ஏற்றி வந்த படகு ஒன்று சிரிய கடல் பகுதியில் மூழ்கியதில் குறைந்தது 61 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிர் தப்பிய இருபது பேர் தெற்கு சிரிய நகரான டார்டூசில் இருக்கும் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வருவதாக அந்நாட்டு சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

லெபனான் துறைமுக நகரான திரிபோலிக்கு அருகில் இருக்கும் மின்யேவில் இருந்து 120 தொடக்கம் 150 வரையானோரை இந்தப் படகு ஏற்றி வந்ததாக உயிர் தப்பிய ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.



இந்த விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படாத நிலையில் கடுமையான காலநிலைக்கு மத்தியில் மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. லெபனானில் 1.5 மில்லியன் சிரிய அகதிகள் மற்றும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த 14,000 அகதிகள் வாழ்கின்றனர். லெபனானில் தற்போது மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கும் சூழலில் அந்நாட்டில் உள்ள அகதிகளே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அந்நாட்டில் வாழும் அகதிகள் மற்றும் குடியேறிகள் ஐரோப்பா உட்பட வேறு இடத்திற்கு செல்ல முயன்று வருகின்றனர். இந்நிலையில் மூழ்கிய படகில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் உட்பட லெபனான், சிரியா மற்றும் பலஸ்தீன நாட்டவர்கள் இருந்துள்ளனர் என்று நம்பப்படுகிறது.

ஐரோப்பாவை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தபோதே அந்தப் படகு மூழ்கியுள்ளது.

இந்த மாத ஆரம்பத்தில் லெபனானில் இருந்து தஞ்சக் கோரிக்கையாளர்களை ஏற்றிய படகு ஒன்று ஐரோப்பாவை நோக்கி பயணித்தபோது துருக்கிக் கடலில் மூழ்கியதில் சிறுவர்கள் உட்பட ஆறு பேர் உயிரிழந்தனர். நான்கு படகுகளில் இருந்து 73 குடியேறிகள் மீட்கப்பட்டதாக துருக்கி கரையோர காவல் படை கூறியது.

## இராணுவ அழைப்பால் ரஷ்ய ஆண்கள் ஓட்டம்

உக்ரைனிய போருக்கான இராணுவ அணிதிரட்டல் ஒன்றை தவிர்ப்பதற்கு ரஷ்ய ஆண்கள் நாட்டை விட்டு தப்பிச்செல்லும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பகுதி அளவான இராணுவ அணிதிரட்ட ஒன்று பற்றி ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கடந்த புதன்கிழமை அறிவிப்பு ஒன்றை விடுத்தது தொடக்கம் ரஷ்ய எல்லைப் பகுதிகளில் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு வரிசை அதிகரித்துள்ளது.

புட்டினின் அறிவிப்பின்படி உக்ரைன் போருக்கான 300,000 மேலதிக படையினர் அணிதிரட்டப்படவுள்ளனர்.

எனினும் போருக்கு தகுதியுடைய வயது கொண்ட ஆண்கள் தப்பிச் செல்வதான கூற்று மிகைப்படுத்தப்பட்டது என்று ரஷ்ய அரசு குறிப்பிட்டுள்ளது.

எனினும் ஜோர்ஜியாவுடனான எல்லையில் பல மைல் தூரத்துக்கு வாகன வரிசை நீண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஜனாதிபதியின் அறிவிப்பு வந்த உடனேயே கடவுச்சீட்டை எடுத்துக் கொண்டு எல்லைக்கு வந்ததாக பெயர் குறிப்பிடாத ஆடவர் ஒருவர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.



விசாவிற்கு விண்ணப்பிக்காமல் ரஷ்யர்கள் நுழையக்கூடிய சில அண்டை நாடுகளில் ஜோர்ஜியாவும் ஒன்றாகும். ரஷ்யாவுடன் 1,300 கி.மீ (800 மைல்) எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் பின்லாந்து செல்வதானால் ரஷ்யர்களுக்கு விசா தேவை. இந்த நிலையில், ஒரே இரவில் அந்த நாட்டுக்கு வரும் மக்களின் கூட்டம் அதிகமாகியிருப்பதாக பின்லாந்து கூறுகிறது. ஆனால், அது சமாளிக்கக்கூடிய அளவில் இருப்பதாகவும் அந்நாடு தெரிவித்தது.

ரஷ்யாவில் இருந்து பிற நாடுகளுக்கு விமானம் மூலம் எளிதாக செல்லக் கூடிய இடங்களாக இஸ்தான்புல், பெல்கிரேட் அல்லது டுபாய் ஆகிய நாடுகள் கருதப்படுகின்றன. இராணுவ அணி திரட்டல் அறிவிக்கப்பட்ட உடனேயே இந்த நாடுகளுக்கு செல்வதற்கான விமான பயணச்சீட்டு விலை உயர்ந்துள்ளது. சில இடங்களுக்கு பயணச்சீட்டுகள் முற்றிலுமாக விற்றுத் தீர்ந்தன.

துருக்கிய ஊடகங்கள் ஒரு வழி பயணச்சீட்டு விற்பனை மிகப்பெரிய அளவில் உச்சத்தை தொட்டதாக செய்தி வெளியிட்டுள்ளன.

## உக்ரைன், அமெரிக்காவுக்கு எதிராக பாதுகாப்புச் சபையில் ரஷ்யா சாடல்

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கே லாவ்ரோவ் ஐ.நா பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் அமெரிக்க, உக்ரைனிய வெளியுறவு அமைச்சர்களைக் கடுமையாகச் சாடியுள்ளார்.

உக்ரைனில் ஆக்கிரமிப்பு ஆரம்பித்த பின் ரஷ்ய, அமெரிக்க, உக்ரைனிய வெளியுறவு அமைச்சர்கள் முதன்முறையாகப் பாதுகாப்புச் சபையில்; சந்தித்தனர்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்ட்டனி பிளிங்கன், சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ உள்ளிட்டோர் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

15 உறுப்பினர்கள் கொண்ட சபையில் மற்றவர்கள் உரையாற்றியதைத் லாவ்ரோவ் செவிகொடுத்துக் கேட்கவில்லை என்று கூறப்படுகிறது.

உக்ரைன் விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை இந்த ஆண்டு மட்டும் 20 முறை கூடியுள்ளது. என்றாலும் அதன்மூலம் ஆக்கபூர்வமான நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்று குறைகூறப்படுகிறது.

நிரந்தர உறுப்பு நாடு என்ற நிலையில் இருப்பதால் அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், சீனா ஆகிய நாடுகளைப் போன்று ரஷ்யாவும் வீட்டோ அதிகாரத்தைக் கைவசம் வைத்துள்ளது.

இதற்கிடையே, உக்ரைன், ரஷ்யாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாய் இருப்பதாகவும் உக்ரைனில் வாழும் ரஷ்ய மொழி பேசும் மக்களைக் கீவ் வெளிப்படையாகத் துன்புறுத்துவதாகவும் லாவ்ரோவ் சாடினார்.

அத்தகைய செயல்களால் படையெடுப்பு தவிர்க்க முடியாமல் போய்விட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் ரஷ்ய இராஜதந்திரிகள் மலையளவு பொய் கூறுவதாக உக்ரைனிய வெளியுறவு அமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளார்.



முக்காடிட செய்தியாளர் மறுப்பு

## பேட்டியை ரத்துச் செய்தார் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம்

தலையில் முக்காடிடும் கோரிக்கையை மறுத்த சி.என்.என் தொலைக்காட்சி செய்தியாளர் கிறிஸ்டியன் ஆமன்போருடனான நேர்காணல் ஒன்றை ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி ரத்துச் செய்துள்ளார்.



எனினும் தான் ஈரானுக்கு வெளியில் நேர்காணல் செய்யும்போது முந்தைய எந்த ஜனாதிபதியும் இவ்வாறான கோரிக்கையை விடுக்கவில்லை என்று ஆமன்போர் குறிப்பிட்டுள்ளார்.

நியுயோர்க் நகரில் கடந்த வியாழக்கிழமை (22) இந்த நேர்காணலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேர்காணலுக்கான நேரம் வழங்கப்பட்ட பின், “புனித மாதங்களான முஹர்ரம் மற்றும் சபர் காரணமாக” தலையில் முக்காடிடும்படி செய்தியாளரிடம் ஜனாதிபதியின் உதவியாளர் ஒருவர் கேட்டுள்ளார். எனினும் அந்தக் கோரிக்கையை மறுத்ததாக ஆமன்போர் தெரிவித்தார்.

ஈரானில் முறையற்ற வகையில் ஹிஜாப் அணிந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் வலுத்து வரும் சூழலிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## விண்கல்லில் மோதும் நாசாவின் விண்கலம்

அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசாவின் கார் வண்டி அளவான விண்கலம் ஒன்று அடுத்த வாரம் விண்கல் ஒன்றில் மோதவுள்ளது. அவ்வாறு மோதிய இடத்தை ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் ஹேரா விண்வெளித் திட்டம் ஆய்வு செய்யவுள்ளது.

நாசாவின் இரட்டை விண்கல் திசைமாற்ற சோதனை விண்கலம் வரும் திங்கட்கிழமை (26) டெமொர்போஸ் என்ற விண்கல்லில் மோதவுள்ளது. இந்த மோதலுக்குப் பின் விண்கல்லின் பயணப்பாதையில் சிறிய மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறான சோதனை நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படுவது இது முதல் முறையாகும்.

டெமொர்போஸ் 11 மில்லியன் கிலோமீற்றருக்கு அப்பால் இருப்பதால் பூமிக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை. பூமியை நோக்கி வரும் விண்கல் ஒன்றை திசைதிருப்பும் சோதனை முயற்சியாகவே இது இடம்பெறுகிறது. இந்நிலையில் விண்கலம் மோதும் நிகழ்வை உலகெங்கும் உள்ள வானியலாளர்கள் கூர்ந்து அவதானிக்கவுள்ளனர்.



இதனைத் தொடர்ந்து இந்த வழித்தடத்தில் ஐரோப்பிய விண்கலமான ஹேரா பயணிக்கவுள்ளது. 2024இல் விண்வெளிக்கு அனுப்பப்படும் ஹேரா 2026 இல் டெமொர்போஸ் விண் கல்லை அடையவுள்ளது. இதனைத் தொடர்ந்து விண்கல் மோதலால் ஏற்பட்ட பாதிப்புகளை அது ஆராயும்.

## ஈரான் ஒழுக்க நெறி பொலிஸ் மீது தடை

ஈரானில் தடுப்புக் காவலில் மரணித்த 22 வயதான மஹ்ஷா அமீனியின் மரணத்தைத் தொடர்ந்து அந்நாட்டு ஒழுக்க நெறி பொலிஸுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.



ஹிஜாப் விதியை மீறியதாக கைது செய்யப்பட்ட அமீனியின் மரணத்தைத் தொடர்ந்து ஈரானில் ஆர்ப்பாட்டங்கள் வலுத்துள்ளன.

அமீனியின் மரணத்திற்கு ஒழுக்க நெறிப் பொலிஸார் பொறுப்பாவதாக அமெரிக்க கருவூலம் குறிப்பிட்டுள்ளது. ஈரானிய பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகம் மற்றும் வன்முறை, அதேபோன்று அமைதியான ஈரானிய ஆர்ப்பாட்டக்காரர்களின் உரிமையை மீறியதற்காக இந்தத் தடை விதிக்கப்படுவதாக அது குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவில் இந்தத் தடை மூலம் இலக்கு வைக்கப்பட்ட தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களின் அமெரிக்காவில் உள்ள சொத்துகள் முடக்கப்படுவதோடு, அவர்களுடன் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு அமெரிக்க பிரஜைகளுக்குத் தடை விதிக்கப்படுகிறது.

2018இல் ஈரான் அணுசக்தி உடன்படிக்கையில் இருந்து அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் விலகியதைத் தொடர்ந்து ஈரான் மீது அமெரிக்கா தொடர்ந்து தடைகளை விதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மன்னராட்சி முறையை எதிர்த்து அவுஸ்திரேலியாவில் போராட்டம்

மன்னராட்சி முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவுஸ்திரேலியாவில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.




பிரிட்டன் மகாராணி எலிசபெத் கடந்த செப்டம்பர் 8ஆம் திகதி காலமானார். அவரது மறைவுக்கு உலகின் பல்வேறு நாடுகளும் இரங்கல் தெரிவித்தன. அவுஸ்திரேலியாவிலும் பிரிட்டன் மகாராணி மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. மேலும் ஒருநாள் அரசு துக்கம் அனுசரிக்கப்பட்டது.

இந்நிலையில் உலகின் பல்வேறு நாடுகளை தங்களது காலணி நாடுகளாக பயன்படுத்தி வந்த பிரிட்டன் நாட்டின் மகாராணி மறைவுக்கு அரசு துக்கம் அனுசரித்ததற்கு அவுஸ்திரேலிய மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். மேலும் மன்னராட்சி முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து சிட்னியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற பேரணி நடைபெற்றது.

அவுஸ்திரேலியாவின் 4 முக்கிய நகரங்களில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் நவீன காலத்தில் மன்னராட்சி முறை தொடர்வது அவமானகரமானது எனத் தெரிவித்த போராட்டக்காரர்கள் இந்த நடைமுறை மாற்றப்பட வேண்டும் என வலியுறுத்தினர்.

## பெண்களைத் தாக்கியவருக்கு 24 ஆண்டுகள் சிறை விதிப்பு

சீனாவில் உணவகம் ஒன்றில் பெண்கள் தாக்கப்பட்டது தொடர்பில் முக்கியக் குற்றவாளிக்கு 24 ஆண்டுச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



சென் ஜிஸி என்ற ஆடவர் தலைநகர் பீஜிங்கிற்குக் கிழக்கே உள்ள டாங்ஷான் வட்டாரத்தில் உள்ள ஓர் உணவகத்தில் பெண்களிடம் தகாத முறையில் நடந்துகொண்டார்.

அதற்கு அந்தப் பெண்கள் மறுப்புத் தெரிவித்தபோது சென்னும் அவரின் நண்பர்களும் அந்தப் பெண்களை நாற்காலிகள், போத்தல்கள் ஆகியவற்றைக் கொண்டு தாக்கியதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

அந்த 4 பெண்களும் லேசாகக் காயமுற்றனர்.

அது குண்டர் கும்பல் தொடர்பான குற்றம் என அதிகாரிகள் கூறினாலும் பலரும் அது நாட்டில் மேலோங்கி இருக்கும் பாலியல் வன்முறையைக் குறிப்பதாகத் தெரிவித்தனர்.

சென் பொதுமக்களை அச்சுறுத்திய குண்டர் கும்பல் ஒன்றின் தலைவர் என்றும் அவர் 2012ஆம் ஆண்டிலிருந்து குற்றங்கள் புரிந்திருப்பதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

அவருக்கு சுமார் 64,000 வெள்ளி அபராதமும் விதிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலும் 27 பேருக்கு 6 மாதங்கள் முதல் 11 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 செப்டெம்பர் 24 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

23 முதல் 26 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.44 |
| லுஹர் | 12.03 |
| அஸர் | 03.16 |
| மஃரிப் | 06.07 |
| இஷா | 07.17 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் புரட்டாசி 7

ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சதுர்த்தசி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | சுகம் |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | செலவு |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | பொறுமை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | போட்டி |
| கும்பம் | மறதி |
| மீனம் | நன்மை |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

# சட்டத்தை முறையாக அமுல்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சட்டத்துக்கு மதிப்பளிக்காது மக்கள் செயற்படும் போது நாடு அராஜக நிலைக்கே செல்லும். அதனை தடுக்கும் வகையில் நாட்டில் சட்டத்தை முறையாக நடைமுறைப் படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப் படுமென நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் சட்டத்துக்கமைய செயற் பட வேண்டியது நாட்டு மக்களான அனைத்து பிரஜைகளினதும் கடமையும் பொறுப்புமாகுமென தெரிவித்த அவர், பாராளுமன்ற ஜனநாயகத்தின் இருப்புக்கு சவால் விடும் வகையில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இனி இது போன்ற செயற்பாடுகளுக்கு இடமளிக்காத வகையில் செயற்படுவது அனைத்து எம்பிக்களினதும் பொறுப்பாகுமென்றும் அவர் சபையில் தெரிவித்தார். எம்பிக்கள் மத்தியில் குறைபாடுகள் இருக்கலாம். எனினும் அரசியலமைப்பின் சட்ட ஆதிக்கத்துக்கிணங்க செயல்படும் நாடு எமது நாடு என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் அமரகீர்த்தி அத்துகோரளவின் அனுதாபப் பிரேரணையில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்:

அமரகீர்த்தி அத்துகோரளவின் படுகொலை தொடர்பில் முழு நாடும் கவலை கொண்டுள்ளது. அது தொடர்பில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் முழு உலகமும் அவதானத்துடன் உள்ளது.

எமது பாராளுமன்ற வரலாற்றில் இது போன்ற பல சம்பவங்களை நாம் காண முடிந்துள்ளது. 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஜன்னல் வீரசிங்க இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

06

# லெப்டினன்ட் கேர்ணல் பிரஜாத் விஜேசிங்க காலமானார்



இராணுவத்தின் 07ஆவது கஜபா படைப் பிரிவின் லெப்டினன் கேர்ணல் பிரஜாத் விஜேசிங்க சுகயீனம் காரணமாக தனது 54 ஆவது வயதில் வியாழக்கிழமை (22) காலமானார்.

லெப்டினன்ட் கேர்ணல் பிரஜாத் வி ஜேசிங்க கலாஓயா இராணுவ தொழிற்பயிற்சி நிலையத்தில் I (கட்டுப்பாட்டு) அதிகாரியாக பணியாற்றி வந்தார்.

தனது இராணுவ பணியின் போது, இராணுவத் தலைமையகத்தில் ஊடக பணியகத்தின் அதிகாரி II (கட்டுப்பாடு), 11ஆவது கஜபா படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் இராணுவ தொண்டர் படையின் ஊடக அதிகாரி உட்பட பல முக்கிய பதவிகளை வகித்தார்.

வடக்கில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் கொழும்பிலிருந்து செல்லும் அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டதுடன் அனைத்து ஊடகவியலாளர்களின் மிக நெருங்கிய நண்பராகவும் அவர் இருந்தார்.

இராணுவத்தின் ஊடகப்பணியில் ஈடுபட்ட நண்பர், லெப்டினன்ட் கேர்ணல் பிரஜாத் விஜேசிங்கவின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலை தினகரனும் தெரிவித்துக்கொள்கிறது.



இலங்கை பத்திரிகை பேரவையால் நடத்தப்பட்ட ஊடகக் கற்கைகள் மற்றும் இதழியல் டிப்ளோமா பாடநெறியின் 08ஆவது தொகுதி மற்றும் பத்திரிகை சான்றிதழ் பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று ராஜகிரிய மத்திய வங்கியின் விது பியச நிறுவன வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, பட்டதாரிகளுக்கான சான்றிதழ்களை வழங்கியபோது.

மன்னாரிலிருந்து சட்டவிரோதமாக

# கடல் வழியாக செல்ல முயன்ற 03 பெண்கள் உட்பட 12 பேர் கைது

மன்னார், ஒலுதுடுவாய் கடற் பகுதியில் (22) இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக இலங்கையிலிருந்து கடல் மார்க்கமாக வெளிநாட்டுக்கு செல்ல முயன்றதாக சந்தேகிக்கப்படும் 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

கடல் வழியாக மேற்கொள்ளப்படும் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக கடற்படையினர் நாட்டின் கடல் மற்றும் கடற்கரையை உள்ளடக்கிய வழக்கமான ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி, மன்னார் ஒலுதுடுவாய் கடற்கரையில் 22 ஆம் திகதி இரவு வடமத்திய கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பலான கஜபா மேற்கொண்ட இந்த விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, சந்தேகத்திற்கிடமான நபர்கள் சி லர் கடற்கரையில் இருப்பதை அவதானித்த கடற்படையினர் அவர்களை சோதனையிட்டனர்.

அங்கு 18 வயதுக்கு மேற்பட்ட இரண்டு ஆண்கள், மூன்று பெண்கள் மற்றும் 18 வயதுக்குட்பட்ட ஏழு பேர்

06

# சாரதி அனுமதி பத்திரம் செல்லுபடி காலம் நீடிப்பு

### ஆலோசனை குழு கூட்டத்தில் அனுமதி



சாரதி அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் கால எல்லையை தற்காலிகமாக நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன சட்டத்தின் கீழான கட்டளைகளுக்கு அமைவாக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஆலோசனைக் குழு இதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, இந்தக் கட்டளைகள் எதிர்காலத்தில் பாராளுமன்ற அனுமதிக்கு முன்வைக்கப்படவுள்ளன.

06



இலங்கையிலுள்ள ரஷ்ய தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேணல் அலெக்ஸி ஏ.பொன்டரேவ் இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவை கடந்த புதன் கிழமை (21) இலங்கை விமானப்படை தலைமையகத்தில் சந்தித்தார். இருதரப்பினருக்கும் இடையிலான கலந்துரையாடலின் பின்பு நினைவு சின்னங்கள் பரிமாறப்பட்டன.

விலங்குகளினால் ஏற்படும்

# பயிர் சேதங்களைக் குறைக்க குறுகிய கால வேலைத்திட்டம்

### அமைச்சர் மஹிந்த அமரவீர



மயில், குரங்கு உள்ளிட்ட விலங்குகளினால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களை குறைப்பதற்கு குறுகிய காலத்தில் பிரயோக ரீதியான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதாக கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கமத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் அண்மையில் (20) பாராளுமன்றத்தில் நடைபெற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வனவிலங்குகளினால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்கள் தொடர்பில் குழுவில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியமைக்குப் பதிலளிக்கும் வகையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் உரிய அனைத்துத் தரப்பினர்களினதும் கருத்துக்களை பெற்றுக்கொள்வதன் அவசியம் குறித்து அமைச்சர் சுட்டிக்காட்டியதுடன் சகலரினதும் ஆதரவை, தான் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் பயிற்செய்கையில் ஈடுபடும் மரக்கறி விவசாயிகளுக்கு உரம் மற்றும் எரிபொருள் வழங்குவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

விலங்கின நலம்பேணல் சட்ட மூலம் தொடர்பிலும் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கருத்தில் கொள்ளப்பட்டது. இதன்போது இந்தச் சட்டமூலம் தொடர்பான விளக்கம் தேவையென வருகை தந்த உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பிறிதொரு தினத்தில் இது தொடர்பில் கலந்துரையாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் குழுக் கூட்டத்தில் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன், இராஜாங்க அமைச்சர்களான டி.பீ. ஹேரத், லசந்த அழகியவண்ண, அனுராத ஜயரத்ன, கனக ஹேரத், காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான உதயகாந்த குணதிலக்க, சிவஞானம் சிறிதரன், தயாசிறி ஜயசேக்கர, துமிந்த திசாநாயக்க, உபுல் மகேந்திர ராஜபக்ஷ, சந்திம வீரக்கொடி, மொஹமட் முஸம்மில், குணதிலக ராஜபக்ஷ, தவராசா கலையரசன், வீ. இராதாகிருஷ்ணன், மற்றும் ஜீ. கருணாகரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிங்கள மக்களின் உரிமைகள் போன்றே

# தமிழ் மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்

### சபையில் ஸ்ரீதரன் எம்பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சிங்கள மக்களின் உரிமைகள், பண்பாட்டு அம்சங்கள் பாதுகாக்கப்படுவது போன்று தமிழ் மக்களின் உரிமைகளும் பண்பாட்டு அம்சங்களும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் என தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி எஸ். ஸ்ரீதரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தமிழர்களுக்கு எதிரான பயங்கரவாத தடைச்சட்டம் தற்போது சிங்களவர்களுக்கு எதிராக திரும்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் கொல்லப்பட்டுள்ள பல தமிழர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை என தெரிவித்த அவர், சிங்கள மக்களின் உரிமை,பண்பாட்டு அம்சங்கள் பாதுகாக்கப்படுவதைப் போன்று தமிழர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமரர் அமரகீர்த்தி அதுகோரள மற்றும் எலிசபெத் மகாராணி ஆகியோரின் அனுதாபப் பிரேரணையில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு உயரிய சபையில் தமிழ் மக்கள் சார்பில் அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அதுகோரள மிக மோசமான முறையில் கொல்லப்பட்டார். அந்த செயற்பாட்டை ஒரு போதும்ஏற்றுக் கொள்ள முடியாது.

மனிதாபிமானமற்ற வகையில் அவர் கொல்லப்பட்டார்.

இலங்கையில் இது புதிய விடயமல்ல. இதுபோன்ற

06

சர்வதேச ரீதியாக சாதனை படைத்த

# சம்மாந்துறை சிறுமிக்கு குவியும் பாராட்டுக்கள்




உலகளாவிய ரீதியிலான பேச்சுப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்று வெற்றிச் சான்றிதழினை சுவீகரித்த கமு/சது/ அரபா வித்தியாலய பழைய மாணவி ஜலீல் பாத்திமா மின்ஹாவுக்கு சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அரபா வித்தியாலய அதிபர் எம். எச். நூருள் ஹிமாயா தலைமையில் இடம்பெற்ற பாராட்டு விழாவிலேயே மாணவி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

ஸ்கொட்லாந்து சங்க இலக்கிய ஆய்வு நடுவம் நடத்திய 06 10 வயதினருக்கிடையிலான மாணவர்கள் இந்தியா, மலேசியா,

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.30 | 249.43 |
| கனடியன் டொலர் | 266.50 | 278.62 |
| யூரோ | 355.51 | 370.47 |
| ஜப்பான் யென் | 2.4825 | 2.5854 |
| சிங்கப்பூர் டொலர் | 252.81 | 263.50 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 406.47 | 422.56 |
| சுவிஸ் பிராங்க் | 369.13 | 386.67 |
| அமெரிக்க டொலர் | 359.17 | 369.94 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 962.56 | கட்டார் ரியால் | 99.05 |
| குவைத் டினார் | 1,174.62 | சவூதி ரியால் | 96.47 |
| ஓமான் ரியால் | 942.58 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.79 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 07ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 27

### குறள் தரும் சிந்தனை



குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் சுட்டே தெளிவு

குற்றமற்றவனாகவும், பழிச்செயல் புரிந்திட அஞ்சி நாணுகின்றவனாகவும் இருப்பவனையே உயர்குடியில் பிறந்தவன் எனத் தெளிவு கொள்ள வேண்டும்.

# போஷாக்கின்மையை போக்க தனிமனித முயற்சிகள் அவசியம்

போஷாக்கின்மை என்பது இன்று இலங்கையில் பேசுபொருளாகி இருக்கிறது. ஆனால் இது இலங்கைக்கு புதிது அல்ல. முதலாம் உலக மகா யுத்தம் மற்றும் இரண்டாம் உலக மகா யுத்தங்களின் போது போதிய உணவு கிடைக்காத காரணத்தால் உலகின் பல நாடுகள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டன. வரட்சி காரணமாக கடும் பஞ்சங்கள் ஏற்பட்டதாலும் உணவு கிடைக்காமல் மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டிருக்கிறார்கள்.

எங்கே போதிய உணவு மக்களுக்கு கிடைக்கவில்லையோ அங்கெல்லாம் பட்டினியும், விலை உயர்வும் போஷாக்கின்மையும் தலைவிரித்தாடத்தான் செய்யும். நாடு என்ற வகையில் இலங்கையும் வரட்சி, பட்டினி, போஷாக்கின்மை என்பனவற்றைக் கடந்துதான் வந்திருக்கிறது.

எழுபதுகளில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்தில் அரிசிக்கும் கோதுமைமாவுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு பங்கீட்டில் மட்டும் அவை விநியோகிக்கப்பட்ட போது பாண் வாங்குவதற்காக அதிகாலையிலேயே மக்கள் நீண்ட வரிசைகளில் சங்கக் கடைகளின் முன்னால் நிற்க வேண்டியிருந்தது. மரவள்ளி, வற்றாளை கிழங்குகளைத் தேடி மக்கள் அலைந்தார்கள்.

இதே காலப்பகுதியில் பெருந்தோட்டங்கள் அரசினால் தேசிய மயமாக்கப்பட்டு பெருமளவில் தோட்டக்காணிகள் பிரித்து வெளியாருக்கு கொடுக்கப்பட்டதால் பெருந்தொகையான பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமது இருப்பை இழந்து வீதிக்கு வர வேண்டியதாயிற்று. காணி உச்சவரம்பு சட்டம் கொண்டு வரப்பட்டது. உலக சந்தையில் அரிசி விலை அதிகரித்து உலகளவில் பொருளாதார மந்த நிலை காணப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய முடிவுகளை அன்றைய அரசு எடுத்ததன் காரணமாக நாட்டில் உணவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது.

அன்று அமைக்கப்பட்டிருந்தது ஒரு சோஷலிச அரசு என்பதால் உலகின் பிரதான நிதி நிறுவனங்கள் அந்தப் பனிப்போர் காலப் பின்னணியில் உதவுவதற்கு முன்வரவில்லை. அன்று பத்திரிகைகளை வெளியிட்டு வந்த ஒரு நிறுவனம், நாட்டில் போஷாக்கு குறைபாடு சிறுவர் மத்தியில் காணப்படுவதாக செய்தி, கட்டுரைகளை வெளியிட்டு வந்ததோடு வயிறு பெருத்த ஒரு குழந்தையின் புகைப்படத்தை வெளியிட்டு போஷாக்கின்மைக்கு அதை ஆதாரமாகவும் காட்ட முற்படவே, ஆத்திரமடைந்த ஸ்ரீமா அரசு பத்திரிகை தணிக்கையை கொண்டு வந்ததோடு, அந்தப் பத்திரிகை நிறுவனத்தை இழுத்து மூடவும் செய்தது.

இவை அனைத்தும் நம்மில் பலர் மறந்து போனவை. ஆனால் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு சமனான ஒரு காலப்பகுதியை நினைவூட்டுபவை. நாம், ஒரு நாடு என்ற அளவில் கடந்த காலத்தில் இருந்து பாடம் கற்றிருக்க வேண்டும். கற்காததன் விளைவையே இப்போது இன்றைய பரம்பரை அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

கடந்த காலத்தோடு ஒப்பிடும்போது, நாட்டின் கடன் பளுவை மீளாய்வு செய்யவும் அதன் பிரகாரம் எமது பொருளாதார மீட்சிக்கான முயற்சிகளில் கைகொடுக்கவும் உலக நிதி நிறுவனங்கள் முன்வந்திருப்பதும், அன்றைக்கு கைகொடுக்கும் நிலையில் இல்லாத இந்தியா இன்று பெருமளவு கடன்களையும் உதவிகளையும வழங்கி வருவதையும், மேலும் அமெரிக்கா, பாரிஸ் உதவி வழங்கும் நாடுகள் அமைப்பு என்பன இலங்கைக்கு உதவ முன்வந்திருப்பதையும் சாதகமான நிலைமைகளாகவே பார்க்க வேண்டும்.

நாடு ஸ்திரமான ஒரு நிலையில் இல்லை என்பது அனைவரும் அறிந்த விடயம் என்பதால் அனைவரும் அதன் ஸ்திரத்தன்மைக்காக பாடுபட்டாக வேண்டுமே தவிர, இன்றைய நிலைக்கு யார் காரணம் என்பதைத் திரும்பத் திரும்ப அலசிக் கொண்டிருப்பதால் பலன் எதுவும் கிட்டப் போவதில்லை. போஷாக்கு குறைபாடு இந்நாட்டில் எப்போதும் இருந்து வருகின்ற ஒன்றுதான். அதன் தாக்கம் சமீப காலமாக அதிகரித்திருக்கலாம். அதற்கான வாய்ப்புகள் இருக்கத்தான் செய்கின்றன. அவ்வாறாயின், அதற்கான காரணங்களை அறிந்து முடிந்தவரை நிவர்த்தி செய்வதுதான் எமது பணியாகவும் முனைப்பாகவும் இருக்க வேண்டும்.

போஷாக்கின்மையை கண்டறிந்து அதை நிவர்த்திக்கக் கூடிய சரியான இடம் பாடசாலைகளே. கிராமத்து மற்றும் பெருந்தோட்டப் பாடசாலைகளில் ஆறாம் அல்லது ஏழாம் ஆண்டுவரையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வாரத்துக்கு சில தினங்களுக்காவது இலைக்கஞ்சி வழங்கவும் அல்லது போஷாக்கான உணவு வழங்கவும் அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த தனவந்தர்கள் மற்றும் வர்த்தகர்கள் முன்வர வேண்டியது அவசியம்.

மறைந்த காஞ்சி பெரியவர் ஒரு முறை ஒருபிடி அரிசி திட்டத்தைக் கொண்டு வந்தார். சமைக்க அரிசியை எடுக்கும்போது ஒரு பிடி அரிசியை எடுத்து இன்னொரு பானையில் போடும்படியும அப்படி சேர்க்கப்பட்ட அரிசியை மாத முடிவில் தானமாக வழங்கும்படியும் சொன்னார். நாம் அதை உதாரணமாகக் கொள்வோம். பேசுவதை விடுத்து செய்கையில் காட்ட வேண்டிய தருணம் இது.

editor.tkn@lakehouse.lk

# சர்வதேச சாதனை படைத்து வரும் பேராசிரியர் ஆறுமுகம் நல்லநாதன்

## காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடா கிளையின் 10 ஆவது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராக பங்கேற்பு

காரைநகர் இந்துக் கல்லூரியின் மகிமை மிக்க பழைய மாணவனான கலாநிதி ஆறுமுகம் நல்லநாதன் லண்டன் Queen Mary பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகவும் தொலைத் தொடர்பாடல் ஆராய்ச்சிப் பிரிவின் தலைவராகவும் பணியாற்றி வருபவர்.

பேராசிரியர் நல்லநாதன் தனது ஆரம்பக் கல்வியை சுப்பிரமணிய வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை காரைநகர் இந்துக் கல்லூரியிலும், உயர்கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பயின்றவர். பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரியான இவர், பொறியியல் பட்டப்படிப்பினை முடித்த பின்னர் பேராதனை பல்கலைக் கழகத்திலேயே விரிவுரையாளராகப் பணியாற்றியிருந்தவர்.

Cambridge பல்கலைக்கழகம், Hong Kong பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கலாநிதிப் பட்டப்படிப்பினை மேற்கொண்டு பொறியியல் துறையில் கலாநிதி பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட இவர், சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தில் உதவிப் பேராசிரியராக 2007ஆம் ஆண்டு வரை சேவையாற்றினார். பின்னர் பெரிய பிரித்தானியாவிற்குச் சென்று லண்டன் King's Collegeஇல் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றியதைத் தொடர்ந்து பேராசிரியராகப் பதவியுயர்வினைப் பெற்றுக் கொண்டார்.

2017ஆம் ஆண்டு தொடக்கம் Queen Mary பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் தொலைத் தொடர்பாடல் ஆராய்ச்சிப் பிரிவின் தலைவராகவும் பணியாற்றி வரும் நல்லநாதன், தகவல் தொழில்நுட்பத்துறையில் சர்வதேச அளவில் சாதனைகள் படைத்து வருபவர்.

சர்வதேச பல்கலைக்கழக மட்டங்களில் கீர்த்திமிகு பட்டியலாகக் கருதப்படுகின்றதான 2016ஆம் ஆண்டு அதிகமாகக் குறிப்பிடப்பட்ட ஆராய்ச்சியாளர் பட்டியலில் பேராசிரியர் நல்லநாதன் அவர்களும் இடம்பெற்று சாதனை படைத்திருந்தார்.



உலக அளவில் மிகப்பெரிய தொழில்நுட்ப நிபுணர்களின் நிறுவனமான மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல் நிறுவனத்தில் (IEEE) Fellow உறுப்பினர் என்ற தகுதியைப் பெற்றுக் கொண்டு மற்றுமொரு உயரிய கௌரவத்தினைப் பெற்றுக் கொண்டவர்.

IEEE Fellow உறுப்பினர் என்ற தகுதி தொழில்நுட்ப சமூகத்தினால் அதிசிறந்த கௌரவமாகவும் முக்கியமான தொழில்துறைசார் சாதனையாகவும் அங்கீகரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். IEEE நிறுவனம் அதன் 16 ஆவது சர்வதேச மாநாட்டிற்கு பேராசிரியர் நல்லநாதன் அவர்களை கௌரவ விருந்தினராக அழைத்து சிறப்பிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

நாவலடிக்கேணி, காரைநகரைச் சேர்ந்த சிறந்த கல்விப் பின்புலத்தைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த நல்லநாதன் அவர்களின் தந்தையார் அமரர் ஆறுமுகம் புகழ்பெற்ற ஆசிரியராக விளங்கியவர்.

சர்வதேச அளவில் சாதனைகளை ஏற்படுத்தி உயரிய கௌரவங்களைப் பெற்று காரை. இந்து அன்னையை பெருமைப்படுத்தி வருகின்ற பேராசிரியர் நல்லநாதன், எதிர்வரும் ஒக்டோபர் 1ஆம்திகதி சனிக்கிழமை கனடா கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெற ஏற்பாடாகியுள்ள பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் 10 ஆவது ஆண்டு விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வது விழாவிற்கு பெரும் சிறப்பினைச் சேர்ப்பதுடன் கல்லூரி அன்னையையும் பேருவகை கொள்ள வைத்துள்ளது.

# நிந்தவூர் கடலரிப்பை தடுப்பதற்கு நிரந்தர தடுப்புச் சுவர் அமைக்கும் முயற்சி வெற்றி

நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும் கடல் அரிப்பினை தடுப்பதற்கு கடந்த காலங்களில் என்னால் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த பொழுதும், தற்போது அதற்கு மேலதிகமாக நிரந்தர தடுப்புச் சுவர்களை (Breakwater) அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கும் நிலையில் அந்த நடவடிக்கைக்கான வெற்றி கிடைத்துள்ளது.

அந்த அடிப்படையில் கடந்த 6ஆம் திகதி எனது வேண்டுகோளை ஏற்று நிந்தவூர் பிரதேசத்திற்கு வருகை தந்த, கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு முறையான விளக்கம் அளிக்கப்படாமலும், அன்றைய தினம் நிந்தவூர் பிரதேச செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்திலும் அவர்களை பங்குபற்றச் செய்யாமலும் கால இழுத்தடிப்புச் செய்யப்பட்டது.

அத்துடன் நிந்தவூர் கடலரிப்பு விடயம் சம்பந்தமாக கடந்த 21 ஆம் திகதி மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கான கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் பிராந்திய பொறியியலாளர் எம். துளசிதாசன் அவர்களை நேரில் சந்தித்து இந்த நிலையான தடுப்பு சுவர் அமைப்பதற்கான நிதியினை பெற்றுக் கொடுப்பதற்கான எனது வேண்டுகோளை அவரிடம் சமர்ப்பித்திருந்தேன்.

எனது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அவர் அந்த கடிதத்தில், பரிந்துரை செய்திருந்தார். இதற்கு மேலதிகமாக எமது நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் Ashraff Thahir அவர்களின் வேண்டுகோளை ஏற்றும், 22 ஆம் திகதி கொழும்பு சென்று, கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தைச் சந்தித்து, இது பற்றி தெரியப்படுத்தினேன்.







பணிப்பாளர் நாயகம் இதனை துரிதமாக செயற்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதேவேளை இந்த நிலையான தடுப்புச் சுவர் அமைப்பதற்கான வரைபடங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை தயார்படுத்தும் நடவடிக்கையினை கையாளுவதற்கு பணிப்பாளர் நாயகத்தினால் கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் பொறியியலாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். எனது தொடர் முயற்சி வெற்றியளித்துள்ளது.

மிக விரைவில் இதனை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மக்களுக்கு அறியத் தருவதுடன், அதிகாரிகள் இதனை அரசியல் கோணத்தில் பார்த்து தனிப்பட்ட ரீதியில் அரசியல் சாயம்பூச முனையக் கூடாது என்பதனையும், இச்செயற்பாட்டை விரைவாக முன்னெடுக்க தமது முழு ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்பதையும் எனதூர் மக்களுக்கும், மீனவர்களுக்கும் தெரியப்படுத்துகின்றேன்.

வை.எல்.சுலைமாலெவ்வை...
பிரதித் தவிசாளர், நிந்தவூர் பிரதேச சபை

# AIA ஸ்ரீலங்கா தலைவராக டான் ஹக் லே நியமனம்

கடந்த 2022 ஜுலை அமுலுக்கு வரும் வகையில் பணிப்பாளர் சபையின் புதிய தலைவராக டான் ஹக் லேயின் நியமனத்தை AIA ஸ்ரீலங்கா அறிவித்திருந்தது. AIA குழும லிமிடட் நிறுவனத்தின் பிராந்தியப் பிரதான நிறைவேற்று அதிகாரியான டான் ஹக் லே தாய்லாந்து, சிங்கப்பூர், புரூனே, மலேசியா, கம்போடியா, மியன்மார் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில் AIA இன் வியாபாரச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாகப் பணியாற்றுவதோடு தற்போது இதனை இலங்கையிலும் தொடரவுள்ளார்.

டான் ஹக் லே AIA குழுமத்தில் 11 வருட அனுபவத்தைப் பெற்றுள்ளதோடு ஆசியாப் பிராந்தியத்தின் காப்புறுதித் துறையில் பரந்துபட்ட பிரிவுகளில் 30 வருடத்திற்கும் அதிகமான அனுபவத்தின் மூலம் தான் பெற்றுக் கொண்ட அறிவு மற்றும் மூலோபாய அனுபவம் ஆகியவற்றினை இலங்கைக்கு கொண்டு வருகின்றார். இவர் ஹெரியட் வாட் பல்கலைக்கழகத்தில் (ஐக்கிய இராச்சியம்) பிரயோக கணிதம் மற்றும் புள்ளிவிபரவியல் இளமானி (முதல் வகுப்பு மேதகைமை) பட்டத்தைப் பெற்றுள்ளதோடு இன்ஸ்டிடியூட் ஒஃப் ஆக்சுவரீஸின் (ஐக்கிய இராச்சியம்) உறுப்பினராகவும் உள்ளார்.

டான் ஹக் லேவின் நியமனம் AIA ஸ்ரீலங்காவிற்கு கிடைத்த மிகப்பெரும் பாக்கியமாகும். மேலும் தற்போது இலங்கையில் நிலவும் மிகவும் சவாலான வியாபாரச் சூழலுக்கு மத்தியில் நிறுவனத்தையும் மற்றும் வியாபாரத்தையும் வெற்றிகரமாக வழிநடத்துவதற்கு இதன் மூலமாக மிகவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

லேவின் நியமனம் AIA இன்ஷூரன்ஸ் லங்காவின் பணிப்பாளர் சபைக்கு AIA ஸ்ரீலங்காவின் பிரதான நிறைவேற்று அதிகாரி சத்துரி முனவீரவின் நியமனத்தின் போது வழங்கப்பட்டிருந்தது. AIA ஸ்ரீலங்கா இலங்கையில் தனது வணிகத்தை ஆரம்பித்த காலத்திலிருந்து நியமிக்கப்பட்ட முதலாவது இலங்கையரும் மற்றும் முதலாவது பெண் நிறைவேற்று அதிகாரியுமான சத்துரி முனவீர தனது கடமைகளை 2022 மே மாதம் பொறுப்பேற்றிருந்தார்.





## பணிப்பாளர் சபைக்கு பிரதான நிறைவேற்று அதிகாரி சத்துரி முனவீர

சத்துரி 2006 இலிருந்தே நிறுவனத்தின் நிறைவேற்றுக் குழுமத்தில் உறுப்பினராகப் பதவி வகிப்பதோடு மூலோபாயத் திட்டமிடல் மற்றும் வியாபாரச் சாதனைகளிலும் பிரதான பங்கு வகிக்கின்றார். AIA ஸ்ரீலங்கா AIA குழுமத்தின் சிக்கலான பெருநிறுவன மறுசீரமைப்பிலிருந்து முழுமையாகச் சொந்தமாக்கப்பட்ட துணை நிறுவனமாக மாறுவதற்கு இவரே வழிநடத்தியிருந்தார்.

AIA ஸ்ரீலங்காவின் பணிப்பாளர் சபைக்கான இப்புதிய நியமனமானது சத்துரியின் தொழில் ரீதியான வாழ்க்கைப் பயணத்தில் நிச்சயமாக மற்றுமொரு மிகச்சிறந்த மைல்கல்லாகவே அமையும்.

இலங்கையின் காப்புறுதித் துறையில் 25 வருடத்திற்கும் அதிகமான அனுபவத்தைக் கொண்டுள்ள மிகவும் அனுபவம் வாய்ந்த அதிகாரியாகவே சத்துரி திகழ்கின்றார். பிரதான நிறைவேற்று அதிகாரியாக நிறுவனத்தை பொறுப்பேற்பதற்கு முன்னர் சத்துரி ஆயுள் காப்புறுதிச் செயற்பாடுகள், நிறுவனச் சட்டம், நிறுவனச் செயலாளர் மற்றும் வெளியுறவுகளுக்குப் பொறுப்பான AIA இன்ஷூரன்ஸ் லங்காவின் சட்ட, நிர்வாக மற்றும் செயற்பாடுகளுக்கான பிரதான பணிப்பாளர் அதிகாரியாகவும் பணியாற்றியிருந்ததோடு, இதற்கு முன்னர் நிறுவனத்தின் பிரதான மனிதவள அதிகாரியாகவும் மற்றும் பிரதான இணக்க அதிகாரியாகவும் பதவி வகித்திருந்தார்.

AIA 100 வருட வரலாற்றுச் சிறப்பைக் கொண்ட நிறுவனமாக பான் ஆசியா ஆயுள் காப்புறுதிக் குழுமத்தின் சுயாதீனமாகப் பொதுப் பட்டியலிடப்பட்ட மிகப்பெரிய நிறுவனமாகத் திகழ்வதோடு, ஆசியா முழுவதும் 18 காப்புறுதிச் சந்தைகளில் மிகவும் வெற்றிகரமாக தனது வணிகத்தை முன்னெடுத்தும் வருகின்றது.

# கடலரிப்பினால் காவு கொள்ளப்படும் திருக்கோவில் கரையோர பிரதேசம்!



திருக்கோவில் பிரதேசத்தில் பாரிய கடல் அரிப்பு இடம்பெற்று வருகிறது. தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்துக்கு முன்னாலுள்ள கடல் பகுதி மற்றும் திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்திற்கு முன்னால் உள்ள கடல் பகுதிகள் கடலரிப்புக்கு இலக்காகி வருகின்றன.


கடந்த சில வார காலமாக இடம்பெற்று வரும் இந்த கடல் அரிப்பில் நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் அடித்துச் செல்லப்பட்டு இருக்கின்றன. அது போல ஏனைய மரங்களையும் கடல் காவு கொண்டிருக்கிறது. சுமார் 100 அடி தூர நிலப்பகுதி கடலுக்குள் காவுகொள்ளப்பட்டு இருக்கின்றது. மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. அவர்களது மீன்பிடி வள்ளங்கள் கரையை விட்டு நகர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடலரிப்பை தடுத்து நிறுத்த உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.





வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறாப் நிருபர்)

# பிறமொழிகளில் பாரதியை அறிமுகப்படுத்துவதில் எதிர்நோக்கும் சவால்கள்!




"மகாகவி பாரதியின் கவிதைகளை அதன் மொழி ஆழம் , ஓசை நயம் , பொருள் ஆகியவற்றை புரிந்துகொண்டு வேற்று மொழிக்கு கொண்டு செல்வது அசாத்தியமானது" என்று தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப்பல்கலைக்கழக துணைவேந்தர் மருத்துவர் சுதா ஷேசய்ய தெரிவித்துள்ளார்.

அவ்வாறிருந்தும், தமிழை தாய்மொழியாகக் கொண்டிராத பலர் பாரதியின் கவிதைகளை தமது மொழிக்கு மாற்றியிருக்கின்றனர். அதற்கு அவர்களுக்கு பொதுவான ஊடகமொழியாக இருந்திருப்பது ஆங்கிலம்தான்.

சோவியத் நாட்டில் உக்ரேயினை தாய்மொழியாகக்கொண்டிருந்தவர் கட்டடத் தொழிலாளி விதாலி ஃபுர்ணிக்கா. இவர் வேலை நேரத்தில் கிடைத்த மதிய உணவு வேளையில், அருகிலிருந்த நூலகம் சென்று படித்த புத்தகம் பாரதியின் கவிதைகள் சிலவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பு.

அதில் ருஷ்யப்புரட்சி பற்றிய "ஆகாவென்று எழுந்ததுபார் யுகப்புரட்சி" கவிதையை படித்துவிட்டே, "அடடா□எங்கள் தேசத்தில் எப்போதோ நடந்த புரட்சி பற்றி தமிழ்நாட்டைச்சேர்ந்த ஒரு கவிஞர் பாடியிருக்கிறாரே, அவர் பற்றி மேலும் தெரிந்து கொள்ள வேண்டும், அவரது மொழியை கற்றுக் கொள்ள வேண்டும்" என்று ஆவலுற்று தனது வேலைத்தலத்தின் மேலிடத்தில் விசேட அனுமதி பெற்றுக் கொண்டு சென்னைக்குப் புறப்பட்டார்.

பின்னாளில் அவர் மொழிபெயர்ப்பாளராகவும் பதிப்பாசிரியராகவும் இலங்கை – தமிழக – சோவியத் நட்புறவுக்கு இலக்கிய ரீதியில் பாலம் அமைப்பவராகவும் மாறினார்.

தமிழ் அறிஞர் மு. வரதராசனிடம் தமிழ் கற்று பின்னாளில் ஜெயகாந்தனின் சில படைப்புகளையும் ருஷ்யமொழிக்கு மாற்றினார். தனக்கு 'தமிழகப் பித்தன்' என்ற புனைபெயரையும் சூட்டிக்கொண்டார். தமிழகம் எங்கும் சுற்றியலைந்து, பிறப்பு முதல் இறப்பு வரையில் என்ற நூலையும் ருஷ்ய மொழியில் எழுதினார். இந்நூலை தமிழ்நாடு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டது.

மொஸ்கோ முன்னேற்றப் பதிப்பகத்தின் தமிழ்ப் பிரிவில் பதிப்பாசிரியரானார். பாரதி பிறந்த நூற்றாண்டு வந்தவேளையில் (1982-1983) சோவியத்தில் பாரதி நூற்றாண்டை கொண்டாடும் குழுவிலும் அங்கம் வகித்தார்.

பாரதி பிறந்த நூற்றாண்டு காலத்தில் ஃபுர்ணீக்கா சோவியத் ஆராய்ச்சியுலகில் 'பாரதி' என்ற தலைப்பில் எழுதியிருந்த கட்டுரையின் தொடக்கம் இவ்வாறு அமைந்திருந்தது.

"இந்திய மகாகவியான சுப்பிரமணிய பாரதியின் பிறந்த தின நூற்றாண்டில் பாரதி பற்றிய சோவியத் யூனியனில் வெளிவந்துள்ள அவரது படைப்புக்களையும் பரிசீலிப்பது முற்றிலும் பொருத்தமேயாகும். மொஸ்கோவிலும் லெனின்கிராடிலும் உள்ள மேற்கல்வி நிலையங்களில் திராவிடவியல் அறிஞர்களைப் பயிற்றுவிக்கும் முறையான வகுப்புக்களைப் புகுத்தியதன் காரணமாகவே, பாரதி பாரம்பரியம் பற்றிய ஆராய்ச்சியும் சாத்தியமாயிற்று"

(ஆதாரம் சோவியத் நாடு இதழ்)

இக்கட்டுரை வெளியான இதழில் சோவியத் ஓவியர் மிகையீல் பெதரோவ் என்பவர் வரைந்த மகாகவி பாரதி ஓவியமும் இடம்பெற்றிருந்தது. அந்தவகையில் பாரதி அங்கிருந்த கல்வியாளர்கள், அறிஞர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், படைப்பாளிகளிடம் மட்டுமன்றி ஓவியர்களிடத்திலும் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியவர் என்பது புலனாகிறது.

ஒரு கட்டடத் தொழிலாளியான விதாலி ஃபுர்ணிக்காவை, தமிழ் ஆர்வலராக, மொழிபெயர்ப்பாளராக, பதிப்பாசிரியராக மாற்றியவர் யார்?

பாரதியார்தான்!

மொழிபெயர்ப்பென்பது சவால்கள் நிரம்பியது தான். சந்தேகமில்லை. தவறான மொழிபெயர்ப்பினால், நீதிமன்றங்களில் தவறான தீர்ப்புகளும் வெளிவந்துள்ளன.

கண்ணகி காதையில், பாண்டிய மன்னன் "கொண்டு வா" என்றதை "கொன்றுவா" என சேவகர்கள் புரிந்து கொண்டனர் என்றும் ஒரு செய்தி இருக்கிறது !

இலங்கையில் எனது மூன்று இலக்கிய நண்பர்கள் பாரதியாரை சிங்கள மக்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். இவர்களின் பணியும் பாரதி பிறந்த நூற்றாண்டு காலத்திலேயே (1982–1983) அங்கே முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில் கண்டி கல்ஹின்னையில் 'தமிழ் மன்றம்' என்ற அமைப்பின் ஊடாக பல நூல்களை வெளியிட்டிருக்கும் ஹனிபா, பாரதியிடத்தில் மிகுந்த பற்றுள்ளவர். தினகரனிலும் Observer இலும் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர். இலங்கை வானொலியிலும் நிகழ்ச்சிகளை நடத்தியிருப்பவர்.

இலங்கையில் பாரதி நூற்றாண்டு காலப்பகுதியில் சிங்கள மக்கள் எளிதாகப்புரிந்துகொள்வதற்காக ஒரு சிறிய நூலை எழுதி தமது நண்பர் கே.ஜி. அமரதாசவிடம் வழங்கி அதனை சிங்களத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

பாரதியை சிங்கள மக்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டும் என்ற எண்ணம் அவர் சிறுவயதில் சிங்கள மக்கள் மத்தியில் வாழ்ந்திருந்தமையினால் தோன்றியிருக்கிறது.

பாரதியின் பக்தராகவே வாழ்ந்திருக்கும் அவர், கல்ஹின்னையில் ஆரம்ப வகுப்பு படிக்கும்வேளையில், நான்காம் வகுப்பு தமிழ்ப்பாட நூலில் படித்த பாரதியின் கவிதை: "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்."

வகுப்பு ஆசிரியர் அதனை அந்த சிறுவயதில் அவரை மனப்பாடம் செய்யுமாறு தூண்டியதால், பாரதியை தொடர்ந்து கருத்தூன்றி பயின்றிருக்கிறார்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற கருத்தியலும் அவருடைய மனதில் வித்தாகியது. உலகமெலாம் பரவச்செய்யும் அதேசமயம் அருகே வாழும் சிங்களச் சகோதரர்களுக்கும் பாரதியின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறவேண்டும் என்ற எண்ணக்கருவும் தோன்றியிருக்கிறது.

பாரதியை தொடர்ந்து பயின்று, எழுத்தாளராகியதும் பாரதி தொடர்பான கட்டுரைகளை வீரகேசரி, தினகரன், சிங்கப்பூர் தமிழ் முரசு முதலானவற்றில் எழுதினார்.

பாரதி நூற்றாண்டின்போதாவது "சிங்களத்தீவினுக்கோர் பாலமமைப்போம்" என்று பாடிய பாரதியைப்பற்றி சிங்களம் தெரிந்தவர்கள் அறியாமல் இருக்கின்றனர். அவர்களுக்கு பாரதியை அறிமுகப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்துடன் பாரதியின் சுருக்கமான வரலாற்றை முதலில் தமிழில் எழுதியதாகவும் பின்னர் அதனை தமது நண்பரும் தமிழ் அபிமானியும் மொழிபெயர்ப்பாளருமான கே.ஜி.அமரதாசவிடம் வழங்கி சிங்களத்தில் மொழிபெயர்த்ததாகவும் பதிவுசெய்திருக்கிறார்.

சில சிங்கள இலக்கியப்பிரதிகளையும் தமிழுக்கு மொழிபெயர்த்திருக்கிறார். அதே சமயம் ஆங்கிலம் மற்றும் ஜெர்மன் மொழியிலான கவிதைகளை சிங்களத்திற்கும் வரவாக்கியிருக்கிறார். இவ்வாறு பிறமொழி இலக்கியங்களை தமது தாய்மொழியாம் சிங்களத்திற்குத் தந்துள்ள தாம், சகோதர மொழியான தமிழ் இலக்கியங்களையும் சிங்கள மக்களுக்கு தரவேண்டும் என்பதில் பெருமைப்படுவதாகவும் சொன்னவர்.



## பாரதி மறைந்து 101 வருடங்கள் (11.12.1882–11.09.1921)




பேராசிரியர் கைலாசபதி மறைந்தபோது, அவர் நினைவாக 'ஆயுபோவன் சகோதரரே' என்ற தலைப்பில் அவருக்கு பிரியாவிடை வழங்கும் அஞ்சலிக் கவிதையை வீரகேசரி வாரவெளியீட்டில் எழுதியவர்.

தென்னிலங்கையில் மாத்தறை ராகுல வித்தியாலயத்தில் கல்வி கற்ற காலத்திலேயே தமிழ்மொழியை சுயமாகக்கற்றவர். லேக்ஹவுஸ் வெளியீட்டுப்பிரிவில் பல வருடங்கள் பணியாற்றியவர். ஆரம்பத்தில் ஆனந்தவிகடன், கல்கி போன்ற தமிழக இதழ்களை விரும்பிப் படித்திருக்கும் அமரதாச, ஈழத்து இலக்கிய சிற்றேடுகளையும் ஈழத்து தமிழ்த்தேசிய இலக்கியங்களையும் மண்வாசனை கமழும் பிரதேச இலக்கியப்படைப்புகளையும் ஆர்வமுடன் படித்து, பல தமிழ் எழுத்தாளர்களின் நண்பரானார்.

இலங்கை திரைப்படக்கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய மற்றும் ஒரு தமிழ் இலக்கிய அபிமானியான ரத்ன நாணயக்காரவும் அமரதாசவும் இணைந்து பாரதியின் சில கவிதைகளை சிங்களத்திற்கு மொழிபெயர்த்தனர்.

காலி ரிச்மண்ட் கல்லூரியின் முன்னாள் மாணவரான ரத்ன நாணயக்கார, தாம் பாரதியின் கவிதைகளில் பேரார்வம் கொள்வதற்கு மூல காரணம் தமிழகப்பேராசிரியர் எஸ். இராமகிருஷ்ணன் என்று குறிப்பிட்டுள்ளார்.

கே.ஜி. அமரதாசவும் ரத்ன நாணயக்காரவும் மொழிபெயர்த்திருந்த பாரதியின் கவிதைகள் சிங்களத்தில் பாரதி பத்ய என்ற பெயரில் வெளியானது. இதனை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வெளியிட்டது.

முனைவர் பிரேமா நந்தகுமார் பாரதியைப்பற்றி பல நூல்களை எழுதியிருப்பவர். பாரதியின் சில கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். அத்துடன் சுப்பிரமணிய பாரதி என்ற நூலையும் ஆங்கிலத்தில் வரவாக்கியவர்.

இவற்றையே இலங்கையில் ரத்னநாணயக்கார படித்துவிட்டு, பாரதியின் சில கவிதைகளை ஆங்கில மூலத்திலிருந்து சிங்களத்திற்கு பெயர்த்துள்ளார்.

பொருள் மயக்கம் பொதிந்துள்ள பாரதியின் கவிதைகளை படிப்பவர்கள் தமது வாசிப்பு அனுபவத்திற்கு ஏற்ப அர்த்தம் கற்பித்துவிடுவார்கள்.

பாரதியின் காணி நிலம் வேண்டும் கவிதையில் வரும் பின்வரும் வரிகள் பலரை தலையை பிய்த்துக்கொள்ளச்செய்திருக்கிறது ! இந்த வரிகளை கூர்ந்து கவனியுங்கள்:

முத்துச் சுடர்போல –நிலாவொளி
முன்பு வரவேணும்; அங்கு
கத்துங் குயிலோசை – சற்றே வந்து
காதிற் படவேணும் –என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே –நன்றாயிளந்
தென்றல் வரவேணும்!

குயில் கூவுமா? கத்துமா? என்று பலரும் முன்னர் விவாதித்தனர்.

இந்தக் கவிதையைப் பொறுத்த மட்டும்
காணி – தூணி காணி கேணி
பத்து முத்து கத்து சித்த பாட்டு
கூட்டு
காட்டு பாட்டு.
முதலான சொற்கள் அடுத்தடுத்து வருகின்றன.

இங்கே, "கத்தும் குயிலோசை தான் சரியாக அமையுமேயன்றி, கூவும் குயிலோசை" அமையாதல்லவா? என்று ஒரு அறிஞர் முன்னர் சொல்லியிருந்தார்.

துணைவேந்தர் மருத்துவர் சுதா ஷேசய்யன், "பாரதியின் பாடல்களை ஒவ்வொரு முறையும் படிக்க படிக்க வெவ்வேறு அர்த்தம் தோன்றும். பாரதியாரின் பாடல்களை வெறும் பாடலாகப் பார்க்க முடியாது. அது ஒரு வடிவம்" என்றும் சொல்லியிருந்தார்.

பொருள்மயக்கம் நிரம்பிய பாரதியின் கவிதைகள் வாசிப்பதற்கு எளிமையாக இருந்தாலும், அவற்றின் வலிமை பிரமிக்கத்தக்கது என்பதுதான் உண்மை.



அத்தகைய உன்னத வரிகளை பிறமொழிகளுக்கு பெயர்ப்பதென்பது மிகவும் கடினமானதுதான்.

அதனாலும் பாரதி பிரமிப்புக்குரியவராகின்றார்!

**லெ.முருகபூபதி...**
அவுஸ்திரேலியா

---

# உலக இலக்கியத்தின் உலராத ஊற்று; ரஷ்ய படைப்புகளில் என்றும் வீசும் காற்று!

ரஷ்ய இலக்கியமென்பது உலக இலக்கியத்தின் உலராத ஊற்றுகளிலொன்று. ஆயினும் தற்போது நடைபெறும் ரஷ்ய உக்ரைன் யுத்தம் காரணமாக மேற்கு நாடுகள் ரஷ்யா மேல் பல்வகை தடைகளை விதித்து வருவதன் நிலையோ ரஷ்ய நூல்கள் மீதான இந்தப் புறக்கணிப்பும் என்ற எண்ணம் தோன்றாமலில்லை.

ரஷ்ய இலக்கிய வாசத்தினை யாராலும் தடுக்க முடியாது. மறைக்க முடியாது. உலக இலக்கியத்துக்கு அதன் பங்களிப்பென்பது போற்றுதற்குரியது.

இலங்கையில் இந்தியப்படைகளின் மேலோங்கியிருந்த சமயத்தில் இந்திய தேசிய விடுதலைக்காகக் குரல் கொடுத்த பாரதியின் எழுத்துகளை நாம் ஒருபோதும் எதிர்க்கவில்லை.

ரஷ்ய இலக்கியத்தில் தவிர்க்க முடியாத பெயர் லியோ டால்ஸ்டாய். ஒடுக்கப்பட்ட மக்களின் நிலையினை அற்புதமாக விளக்கவும் செய்த லியோ டால்ஸ்டாய் காலம் கடந்தும் அனைவராலும் அவரது எழுத்துக்கள் வாசிக்கப்பட்டு வருகின்றன.

லியோ டால்ஸ்டாய் புதின எழுத்தாளர்களுள் மிகச் சிறந்தவர்களுள் ஒருவராக மதிக்கப்படுகிறார். இவரது மிகச் சிறந்த ஆக்கங்களான போரும் அமைதியும், அன்னா கரேனினா ஆகியவை, 19 ஆம் நூற்றாண்டு ரஷ்ய வாழ்க்கையை விபரிப்பதில் உண்மைவாதப் புனைகதைகளின் உயர்நிலையைக் காட்டுகின்றன.

லியோ டால்ஸ்டாய் (Leo Tolstoy) 1828 ம் ஆண்டு செப்டம்பர் 9இல் பிறந்தார். காலம் கடந்தும் அனைவராலும் அவரது எழுத்துக்கள் வாசிக்கப்பட்டு வருகின்றன. நாவல்கள் உட்பட சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரைகள், சிறுவர்களுக்கான நீதிக்கதைகளும் எழுதியுள்ளார்.

இவருடைய அன்னா கரீனீனா, போரும் அமைதியும் போன்ற நாவல்கள் புகழ்பெற்றவை. டால்ஸ்டாய் இறுதி வரை வன்முறைகளுக்கு எதிராகவே வாழ்ந்து வந்துள்ளார்.

பாராட்டுவதற்கான கலைச்சிறப்புடைய நூல்களை மட்டும் டால்ஸ்டாய் படைக்கவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் நிலையினை அற்புதமாக விளக்கவும் செய்தார் என டால்ஸ்டாய் மறைவின் போது லெனின் எழுதிய அஞ்சலிக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லியோ டால்ஸ்டாய், மத்திய ரஷ்யாவில் உள்ள யஸ்யானா போல்யானாவில் பிறந்தார். டால்ஸ்டாய்கள் ரஷ்யாவில் பெயர் பெற்ற பழைய பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ரஷ்ய உயர்குடியின் பெரும் குடும்பங்களுடன் தொடர்புகளைக் கொண்டவர்கள். அலெக்சாண்டர் புஷ்கின், லியோ டால்ஸ்டாயின் உறவினராவார். லியோ டால்ஸ்டாய் வகுப்பு உணர்வு கொண்டவராக இருந்தார்.

உலகப் புரபல்யமான 'போரும்அமைதியும்' ஐந்து ரஷ்ய அரச குடும்பங்களின் பார்வையில், ரஷ்ய மீதான பிரான்சியப் படையெடுப்பை அடுத்த நிகழ்வுகளையும் சார்மன்னர் சமூகத்தில் நெப்போலிய காலத்தின் தாக்கத்தையும் விரிவாக விபரிக்கின்றது.

### போரும் அமைதியும் நாவல்:


போரும் அமைதியும் (War and Peace, ரஷ்ய மொழி:) ருசிய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் எழுதிய புதினம் ஆகும். இந்த நூல் முழுமையாக 1869ஆம் ஆண்டு முதன்முதலாகப் பதிப்பிக்கப்பட்டது. இதிகாச அளவிலான இந்நூல் உலக இலக்கியத்தில் மிகவும் முதன்மையானதாக இன்றும் கருதப்படுகின்றது. இதுவும் டால்ஸ்டாயின் மற்றொரு படைப்பான அன்னா கரேனினாவும் (1873–1877) அவரது சிறந்த இலக்கியச் சாதனையாக பல காலங் காலமாக கருதப்படுகின்றன.


டால்ஸ்டாய், போரும் அமைதியும் "புதினமல்ல, கவிதையுமல்ல, வரலாற்று பதிவேடுமல்ல" எனக் கூறியுள்ளார்.

### தமிழில் மொழிபெயர்ப்பான நாவல்:

டி. எஸ். சொக்கலிங்கம் இப்புதினத்தை தமிழில் மொழிபெயர்ப்பு செய்துள்ளார்.

## 'போரும் அமைதியும்' படைத்த லியோ டால்ஸ்டாய்!





சிறந்த இதழியலாளர் மட்டுமல்ல, சொக்கலிங்கம் சிறந்த படைப்பு இலக்கியவாதியும் ஆவார். லியோ டால்ஸ்டாயின் புகழ் பெற்ற நாவலான போரும் அமைதியும் என்ற நாவலை தமிழாக்கம் செய்தார். இது தவிர, சிறுகதை, நாவல், கவிதை என இலக்கியத்தின் அத்தனை துறைகளிலும் சிறப்பான பங்கினை நல்கியுள்ளார் சொக்கலிங்கம்.

லியோ டால்ஸ்டாய் ரஷ்ய இலக்கியத்தின் மாபெரும் எழுத்தாளர்களில் ஒருவராவார். அவரது படைப்புகளில் போரும் அமைதியும் மற்றும் அன்னா கரேனினா மற்றும் ஹதாஜி முரத், இவான் இலிச்சின்மரணம் ஆகியவை போற்றுதலுக்குறிய படைப்புகளாகும்.

விமர்சகர்கள் மற்றும் நாவலாசிரியர்கள் டால்ஸ்டாயின் கலைக்கு தாங்களே அத்தாட்சிகளாய் இருந்திருக்கின்றனர். விர்ஜினியா வூல்ஃப் ஒரு படி மேலே டால்ஸ்டாயை அனைத்து நாவலாசிரிகளையும் விட மிகச்சிறந்தவர் என்று அறிவித்தார்.

டால்ஸ்டாயின் சமகாலத்தவர்கள் அவருக்கு உயர்ந்த மரியாதை செலுத்தினார்கள். பியோடார் தாஸ்தொவெஸ்கி அவரை அனைத்து நாவலாசிரியர்களை விடவும் மிகப்பெரியவராக கருதினார். போரும் அமைதியும் மொழிபெயர்ப்பைப் படித்தபோது கஸ்டவ் புளூபெர்ட், டால்ஸ்டாய் ஒரு சிறந்த கலைஞர் மற்றும் சிறந்த உளவியலாளர் என்று விபரித்தார்.

அன்டோன் செக்கோவ் அவர்கள், டால்ஸ்டாயை சந்திப்பதற்கு அடிக்கடி வருகை தருவதுண்டு, அன்டோன் அவர்கள் டால்ஸ்டாயைப் இவ்வாறு போற்றுகிறார், "இலக்கியம் டால்ஸ்டாய் போன்றோர் வைத்திருக்கும் போது, ஒரு எழுத்தாளராக இருப்பதற்கு எளிதானது, இனிமையானது; நீங்கள் எதையாவது சாதித்து விட்டீர்கள் அல்லது இன்னமும் எதையும் சாதிக்கவில்லை என்று தெரிந்தாலும் கூட, அது வேறு விதமாக இருக்கலாம், ஏனெனில் டால்ஸ்டாய் எல்லோருக்காகவும் சாதிக்கிறார். ஏனெனில் இலக்கியத்தில் முதலீடு செய்யப்படும் அனைத்து நம்பிக்கைகளையும் அபிலாஷைகளையும் அவர் நியாயப்படுத்துகிறார்" எனக் கூறியுள்ளார்.

போரும் அமைதியும் எழுதப்பட்ட நாவல்களிலே மிகப் பெரிய நாவல்களில் ஒன்று, அதன் வியத்தகு அகலத்திற்கும் ஒற்றுமைக்கும் குறிப்பிடத்தக்கது. அதன் பரந்த கதைக்களம் 580 கதாபாத்திரங்களை உள்ளடக்கியது, பல வரலாற்றுடன் மற்றும் கற்பனை கலந்து உள்ளது. இந்தக் கதையானது குடும்ப வாழ்க்கையிலிருந்து தொடங்கி நெப்போலியனின் தலைமையகத்திற்கும், ரஷ்யாவின் அலெக்ஸாண்டர் நீதிமன்றத்திற்கும், ஆஸ்டெர்லிட்ஸ் மற்றும் போரோடினோ போர்க்களத்திற்குள்ளும் நகர்கிறது.

### வரலாற்றின் தத்துவ புதினம்:

இந்த நாவல் டால்ஸ்டாயின் வரலாற்றின் தத்துவத்தையும், குறிப்பாக நெப்போலியன் மற்றும் அலெக்ஸாண்டர் போன்ற தனிநபர்களின் முக்கியத்துவத்தையும் ஆராய்கிறது. ஆச்சரியப்படத்தக்க வகையில், டால்ஸ்டாய் போரும் அமைதியும் ஒரு நாவலாக அவர் கருதவில்லை. அந்த நேரத்தில் எழுதப்பட்ட பெரும் ரஷ்ய கற்பனைகளில் பலவற்றை நாவல்கள் என்று அவர் கருதினார்.

முதலில் எழுதிய போரும் அமைதியும் ஆக்கத்தை டால்ஸ்டாய் புதினத்திற்கும் மேலானதாகக் கருதியதால் இதனையே தம்முடைய முதல் உண்மையான புதினமாக கருதினார். மேலும் பின்னாளில் அந்த நாவல்கள் வாழ்க்கையின் உண்மையான யதார்த்தத்தைக் காட்டவில்லை என்றும் வாதிட்டார். 'போரும் அமைதியும்' படைத்த லியோ டால்ஸ்டாய் உலகின் மகத்தான இலக்கிய சிருஷ்டியே!

லியோ டால்ஸ்டாய் படைத்த புதின இலக்கிங்களினால் வையக வரலாற்றில் ஒரு மகத்தான இலக்கிய சிருஷ்டியாகவே மிளிர்கின்றார். போரும் அமைதியும் புதினமானது உலக இலக்கியத்தின் உலராத ஊற்றாகும். லியோ டால்ஸ்டாய் ரஷ்ய படைப்புகளில் என்றும் ஒளிரும் விடிவெள்ளியே!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

## கடல் வழியாக செல்ல... 03ஆம் பக்கத் தொடர்

உட்பட 12 பேர், சட்டவிரோதமாக நாட்டிலிருந்து கடல் மார்க்கமாக வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக தங்கியிருந்ததாக சந்தேகிக்கப்பட்டதுடன் அவர்களை கைது செய்தனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் வெடித்தலதீவு பிரதேசத்தைச் சேர்ந்தவர்களென அடையாளம் காணப்பட்டு, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## சம்மாந்துறை சிறுமிக்கு... 03ஆம் பக்கத் தொடர்

கனடா, இலங்கை, அமெரிக்கா, ஸ்கொட்லாந்து, இங்கிலாந்து , கட்டார், மலேசியா, சிங்கப்பூர், ஜெர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, இன்னும் பல நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் பங்கேற்ற "கல்வி கண் போன்றது" எனும் தலைப்பில் இடம்பெற்ற உலகளாவிய பேச்சுப் போட்டியில் கலந்து கொண்ட ஜலீல் பாத்திமா மின்ஹா சர்வதேச ரீதியில் மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

மேலும், மின்மினி மின்ஹாவுக்கு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி, "சர்வதேச பறவை" எனும் விருதும் வழங்கி கௌரவித்திருந்தனர்.

அதேவேளை, இம் மாணவி இதற்கு முன்னர் தமிழ்நாட்டு இலக்கிய கழகம் வழங்கிய இந்திய முன்னாள் அதிபர் அப்துல் கலாம் கனவுக் கண்ணி விருது, தமிழ் நாட்டு அரசின் இளமா மணி காந்தி விருது மற்றும் தமிழ்நாடு அரசு வழங்கிய சிறந்த மாணவர் விருது போன்றவைகளையும் சுவீகரித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அத்தியாவசிய பொருட்கள்...

இந்த 05 வகையான பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது. இதன்படி பெரிய வெங்காயம்: ரூ. 150, வெள்ளைச் சீனி: ரூ. 278, பச்சை அரிசி: ரூ. 179, நாட்டு அரிசி: ரூ. 185, பருப்பு: ரூ. 415 என்றும் லங்கா சதொச அறிவித்துள்ளது.

## தமிழ் மக்களின்... 03ஆம் பக்கத் தொடர்


பல்வேறு சம்பவங்கள் இதற்கு முன்னர் இடம்பெற்றுள்ளன.கிருஷாந்தி படுகொலை,செம்மணி படுகொலை உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களை குறிப்பிட முடியும். எனினும் இதுவரை அதற்கு நியாயம் கிடைக்கவில்லை. மாமனிதர் குமார் பொன்னம்பலம் கொழும்பில் பகிரங்கமாக கொல்லப்பட்டார்.ஜோசப் பரராஜசிங்கம், சிவநேசன், ரவிராஜ் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டார்கள். ஆனால் இதுவரை அவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

## வழக்கு விசாரணை...

நேற்று (23) இடம்பெற்றது.

இதன்போது இந்த விசாரணையை நவம்பர் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்குமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட மூவரினால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

# அமரர் பண்டாரநாயக்கா பற்றி முத்தழகு பாடிய தமிழ் பாடல்கள்



தேசிய கலை கலாசார வளர்ச்சிக்கு வித்திட்ட இலங்கையின் முன்னாள் பிரதமர் அமரர் எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க மீது 1924 ஆம் ஆண்டு பாடப்பட்ட பாடல்களை மீண்டும் இலங்கை வானொலி தமிழ் சேவையில் கேட்கின்ற வாய்ப்பு இலங்கை வானொலி தமிழ் சேவை ரசிகர்களுக்கு கிடைக்க இருக்கின்றது. இந்தப் பாடல்கள், எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 7.00 மணிக்குப் பின் தேசிய சேவையிலும் தென்றல் சேவையிலும் ஒலிபரப்பப்படவுள்ளன.

பிரபல தேசிய பாடகரும் வானொலி தொலைக்காட்சி தமிழ், சிங்கள திரைப்படப் பின்னணிப் பாடகருமான வி. சூரியகுமார் முத்தழகு பாடிய பாடல்கள் இவ்வாறு ஒலிபரப்பப்படவிருக்கின்றன.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் முயற்சிக்கு அமைய தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் கணபதிப்பிள்ளையின் நடவடிக்கைக்கு ஏற்ப ய இந்தப் பாடல்கள் ஒலிபரப்பப்படவிருக்கின்றன.

## சாரதி அனுமதி பத்திரம்... 03ஆம் பக்கத் தொடர்

மேலும், இந்தக் குழுவில் உள்நாட்டு கார் உற்பத்தியை மேம்படுத்துவது குறித்து ஆராயுமாறும் அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

## சட்டத்தை முறையாக... 03ஆம் பக்கத் தொடர்

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்முறைகளில் 60,000 உயிர்கள் பலி கொள்ளப்பட்டுள்ளன.

அண்மையில் நடைபெற்ற மக்கள் ஆர்ப்பாட்டங்களின் போது சரியான தலைமைத்துவம் நோக்கம் இல்லாததால் சந்தர்ப்பவாத குழுக்கள் வன்முறைகளை மேற்கொண்டன. அதில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உட்பட பலர் கொல்லப்பட்டுள்ளனர். அமைச்சர்கள், எம்பிக்களின் வீடுகள், வாகனங்கள், சில பகுதிகளில் மக்களின் சொத்துக்களும் தீக்கிரையாக்கப்பட்டன. இது பாராளுமன்ற ஜனநாயகத்தின் இருப்புக்கு சவால் விடும் செயலாகுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வெளிநாட்டு பெண் மீது...

போதையில்இருந்த ஒரு குழுவினர் அவரை பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளனர். இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் போதையில் இருந்த 10 பேரை கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

## 79 வயது யானை...

உயிரியல் பூங்கா வட்டாரங்கள் தெரிவித்தன.

தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையில் 1949 முதல் வசித்து வந்த "பந்துல" என்ற இந்த யானை தனது 79 வது வயதில் உயிரிழந்துள்ளது.

## வசந்த முதலிகேயின் மனு...

பிரியநாத ஜயவர்தன தலைமையிலான மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் நேற்று அழைக்கப்பட்டன. இதன்போது, அடிப்படை உரிமைமீறல் மனுக்களை எதிர்வரும் ஒக்டோபர் 18ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மாஅதிபர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## கதிர்காமம் பிரதேச சபை...

கைவிடப்பட்டன. இதனையடுத்து, பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட சபையின் செயற்பாடுகள் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதவான் எச்.எம்.ஆர் அநுரகுமாரவின் விசாரணை அறிக்கைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், புதிய பிரதேச சபை ஸ்தாபிக்கப்படும் வரை அதன் செயற்பாடுகளை முன்னெடுக்கும் அதிகாரம் மொனராகலை உதவி உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ளதாக அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திரிபோஷவில் எந்தவித...

திரிபோஷவில் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட புற்றுநோயை ஏற்படுத்தும் அஃப்லாடாக்சின் உள்ளது என்பது நிரூபிக்கப்படவில்லை என தெரிவித்துள்ள திரிபோஷ நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன,

தாய்மார்கள் மத்தியில் அச்சத்தை பரப்புவதற்காக இட்டுக்கட்டப்பட்ட கதை இது என்றும் நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் உணவுப் பற்றாக்குறை சூழ்நிலையில் இதுபோன்ற போலியான அறிக்கைகள் தாய்மார்களின் மனநிலையை குலைத்துவிடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திரிபோஷ தொடர்பில் திருப்தியடைந்த தாய்மார்கள் உள்ளனர். எனவே, திரிபோஷ உண்ணுவதற்கு அச்சப்பட வேண்டாம் என அவர் தாய்மார்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். திரிபோஷ தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆரோக்கியமான ஊட்டச்சத்து உணவாக என்றும் அவர் கூறியுள்ளார்.

## பாடசாலை மாணவர்களுக்கு ...

வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு வெள்ளிக்கிழமை (23)நடைபெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

சில சம்பவங்களை மாத்திரம் கொண்டு அவற்றை திரிபுபடுத்தி வேறு வகையான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

எமது காலத்திலும் பாடசாலைகளில் காலைக்கூட்டம் இடம்பெறும் போது, மாணவர்கள் மயங்கி விழுவது வழமையானதொரு விடயமாகும். இது பாடசாலைக்கு சென்ற அனைவரும் அறிந்த பொதுவானதொரு விடயம்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் முறையான உணவு வழங்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளமை உண்மை.எனவேதான் அரசாங்கத்தினால் நிவாரண வேலைத்திட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கமையவே நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில், பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சரினால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கமைய பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

## கோதுமை மாவின் விலை ...

அடுத்த வாரம் முதல் கோதுமையின் விலை குறைவடையும் என இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

துருக்கி மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து முன்பதிவு செய்யப்பட்ட கோதுமை மா கடந்த வாரம் நாட்டிற்கு வந்துள்ளது.

மேலும் கடந்த மாதங்களில் கோதுமை மா இறக்குமதி நிறுவனங்கள் முன்பதிவு செய்யாமையினால், நாட்டில் கோதுமை மாவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டதுடன், ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 350 – 400 ரூபா வரை அதிகரித்தது.

எவ்வாறாயினும், கொழும்பு 4ஆம் குறுக்குத் தெரு இறக்குமதியாளர்கள் கோதுமை மாவை முன்பதிவு செய்து கையிருப்பு பெறுவதால் கிலோ ஒன்றின் விலை 300 ரூபாவிற்கு குறைவடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மின் கட்டணத்தை...

உருவாக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று (23) நடைபெற்ற போது மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

மத வழிபாட்டு தலங்களுக்கு அதிகளவான மின்சாரக் கட்டணத்தை செலுத்த வேண்டியுள்ளதாக மதத் தலைவர்கள் குறிப்பிட்டுள்ள விடயம் தொடர்பில் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அமைச்சரவைக்கு தெளிவுபடுத்தினார். நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ , பிரதமர் தினேஷ்குணவர்தன உள்ளிட்ட ஏனைய அமைச்சர்களும் இது தொடர்பில் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தினர்.

அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட அனைத்து நிலைப்பாடுகளையும் கவனத்தில் கொண்டு , விகாரைகளுக்கு மாத்திரமின்றி ஏனைய அனைத்து மத வழிபாட்டு தளங்களுக்கும் மின்சார கட்டணத்தை வழங்குவதற்கான நீண்ட கால நிவாரண திட்டமொன்றை தயாரிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன் போது ஆலோசனை வழங்கினார்.

அதற்கமைய சகல மத வழிபாட்டு தளங்களிலும் சூரிய சக்தி மூலமான மின்உற்பத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு இதன் போது தீர்மானிக்கப்பட்டது. அதே போன்று வேறு வழிமுறையில் நிவாரணத்தை வழங்குவதற்கான செயற்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் அவதானம் செலுத்துமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார் என்றார்.

## தொல்லியல் என்ற பெயரில் ...

அமைச்சர் விதுர விக்ரமநாயக்க இக்குற்றச்சாட்டை மறுப்பதாக குறிப்பிட்டார்.

திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் காணிகள் அபகரிக்கப்பட்டு புதிய வியாபாரத்தளங்கள் அமைக்கப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஸ்ரீதரன் ஒத்திவைப்பு வேளை விவாதத்தை முன்வைத்தார்.

நூற்றுக்கணக்கான ஏக்கர் காணியை கொண்டிருந்த திருக்கோணேஸ்வரம் இன்று 18 ஏக்கர் காணியை மாத்திரமே கொண்டிருப்பதாக அவர் இதன்போது குறிப்பிட்டார்.

காசிக்கும், திருப்பதிக்கும் செல்கின்ற அரசியல்வாதிகள் அதே சிவ பெருமான் வீற்றிருக்கும் திருகோணேஸ்வர காணியை அபகரிப்பதாக அவர் குற்றம் சுமத்தினார்.

இந்த தெய்வ நிந்தனையே நாடு வீழ்ச்சி நிலைக்கு செல்கின்றமைக்கான காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு பதில் வழங்கி உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர், விதுர விக்கிரமநாயக்க, நாடு இன்னும் பிரிந்து செயற்படுவதாக குறிப்பிட்டார்.

ஒவ்வொருவரும் தம்முடைய தனிப்பட்ட நலன்களை கருத்திற்கொண்டு செயற்படுகின்றனர் என்றும் ஒவ்வொருவரும் வரலாறுகளை தெரிவிக்கின்றனர் என்றும் எனினும் வரலாறுகளை பற்றி சிந்திக்காமல், நடைமுறையை பற்றி சிந்திக்கவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

அகழ்வாராய்ச்சி விஞ்ஞானமாகும் என்றும் எனவே, தற்போது எழுந்துள்ள பிரச்சினை தொடர்பாக விரைவில் திருகோணமலைக்குச் சென்று ஆலய நிர்வாகத்தினருடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## நுரைச்சோலையில் 46 மில்...

கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். இலங்கை கடற்படையினரால் நேற்று 23 ஆம் திகதி, அதிகாலை நுரைச் சோலை இளந்தடி பகுதியில் 155 கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சா பொதிகளும் இரண்டு கார்களுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

ஆட்கடத்தல் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்கும் நோக்கில் கடற்படை, தீவைச் சுற்றியுள்ள கடல் மற்றும் கரையோரப் பகுதிகளை உள்ளடக்கிய வழக்கமான கண்காணிப்பு நடவடிக்கைகள் மற்றும் ரோந்துப் பணிகளை மேற்கொள்கிறது. இதன்படி, வடமேற்கு கடற்படை கட்டளைக்கு சொந்தமான இலங்கை கடற்படை கப்பலான விஜயவின் விசேட தேடுதல் நடவடிக்கை நேற்று நுரைச்சோலை பகுதியில் நடத்தப்பட்டது.

இதன்போது, இளந்தடி பகுதியில் வீடொன்றுக்கருகில் நிறுத்தப்பட்டிருந்த காரை சோதனையிட்டபோது 78 கஞ்சா பொதிகள் கொண்டு செல்வதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. இதில் 155 கிலோ , 450 கிராம் கேரள கஞ்சா பொதியிடப்பட்டிருந்தன,

இரண்டு சந்தேக நபர்கள், இரண்டு கார், மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் என்பன கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இதன்படி, கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா கையிருப்பின் மொத்த பெறுமதி 46 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என நம்பப்படுகிறது.

கேரள கஞ்சாவுடன் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 35 மற்றும் 40 வயதுடைய இரண்டு சந்தேகநபர்கள் ராகம பகுதியைச் சேர்ந்தவர்களெனவும், அவர்களை நுரைச்சோலை பொலிஸாரிடம் ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும் கடற்படை தெரிவித்தது.

## நிலக்கரி இறக்குமதியை...

தெரிவித்தார். சமீபத்தில் வழங்கப்பட்ட நிலக்கரி விலைமனுக்கள், கடந்த ஆண்டு வழங்கப்பட்டதைவிட குறைவான ஏலத்துக்கானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொழில்நுட்ப மற்றும் சட்ட சிக்கல்கள் காரணமாக இலங்கை நிலக்கரியை உரிய நேரத்தில் இறக்குமதி செய்யத் தவறினால் அது நெருக்கடியை ஏற்படுத்தும் என்றும், எனவே அவசர முடிவொன்றை எடுப்பதற்கு அமைச்சரவை உபகுழுவை நியமிக்க அமைச்சரவை தீர்மானித்ததாகவும், மக்களை பாதிக்காத வகையில் கொள்முதல் செய்வது முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மின்வெட்டு நீடிக்கப்படுவதற்கு வழிவகுக்கும் மின் உற்பத்தி நிலையத்தை மூடுவதைத் தடுப்பதற்குத் தேவையான அனைத்து முடிவுகளையும் சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் அமைச்சரவை துணைக் குழு எடுக்கும் என்று அவர் தெரிவித்தார்.

மக்களை எந்த வகையிலும் பாதிக்காத வகையில், தேசிய அவசர தேவையாக நிலக்கரி கொள்முதல் செய்யப்படும்.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கு நிலக்கரி கொள்வனவு செய்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக இலங்கை மீண்டும் மின்சார நெருக்கடிக்கு முகம் கொடுக்க வாய்ப்புள்ளது. 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் 25 ஆம் திகதிக்குள் நிலக்கரி கிடைக்காவிட்டால் நாளாந்த மின்வெட்டு பத்து மணித்தியாலங்களாக நீடிக்கப்படும் என இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் எச்சரித்துள்ளது.

## தேசிய சபைக்கு 27...

மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது. வழமையான பணிகளுக்குப் பின்னர் கடந்த 20ஆம் திகதியன்று பாராளுமன்ற அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட தேசியசபையின் நியமனங்கள் தொடர்பில் சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

தேசிய சபையின் தலைவராக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன செயற்படுவதுடன் பிரதமர் தினேஷ் குணவர்தன, சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோருடன் அனைத்து கட்சிகளினதும் பிரதிநிதிகள் 27 பேர் இந்த தேசியசபையில் செயற்படுவரென்றும் சபாநாயகர் அறிவித்தார்.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தெரிவு செய்த 35க்கும் குறைவான பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய சபைக்கு நியமிக்கப்படவேண்டுமென்ற விதி முறைக்கமைய 27 உறுப்பினர்கள் அரசியல் கட்சிகளிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி தேசிய சபையில் அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, நஸீர் அஹமட் பாராளுமன்ற உறுப்பினர்களான சிசிர ஜயக்கொடி ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, டிரான் அலஸ், பவித்ரா வன்னியாராச்சி, வஜிர அபேவர்தன, ஏ.எல்.எம் அதாவுல்லா , திஸ்ஸ விதாரண, ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன், விமல் வீரவன்ச, உதய கம்மம்பில, பழனி திகாம்பரம், மனோ கணேசன், ரோஹித்த அபேகுணவர்தன, நாமல் ராஜபக்ஷ, அலி சப்ரி ரஹீம், ஜீவன் தொண்டமான், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அத்துரலியே ரதன தேரர், அசங்க நவரட்ண, சி.வி விக்னேஸ்வரன், வாசுதேவ நாணயக்கார, வீரசுமண வீரசிங்க, சாகர காரியவசம் ஆகியோர் மேற்படி சபையின் உறுப்பினர்களாக செயற்படுவார்கள் என்றும் சபாநாயகர் அறிவித்தார்.

குறுகிய, நடுத்தர, நீண்ட கால தேசிய கொள்கைகளைத் தயாரிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்குரிய முன்னுரிமைகளை நிர்ணயித்தல், பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான குறுகிய , நடுத்தர பொது குறைந்தபட்ச வேலைத்திட்டம் தொடர்பில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்தல் , அமைச்சர்கள் விசேட தெரிவுக்குழுக்களின் தலைவர்கள், இளைஞர் அமைப்புகளை கண்காணிப்போரின் பங்குபற்றுதலுடன் விசேட கூட்டத்துக்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வது தேசிய சபையின் பொறுப்பாகும்.

தற்போது நடைமுறையிலுள்ள தெரிவுக்குழுக்களிடமிருந்து அறிக்கைகளை பெற்றுக்கொள்ளும் இயலுமையும் தேசிய சபைக்கு காணப்படுவதாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

## காத்தான்குடியில் மூன்று...

பேக்கரிகளின் உணவு தயாரிக்கும் இடங்களில் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் உரிமையாளர்களுக்கு இவைகளை சீர் செய்வதற்காக கால அவகாசமும் வழங்கப்பட்டது,

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி குணசிங்கம் சுகுணன் தலைமையில் நடைபெற்ற இந்த சோதனை நடவடிக்கையில் சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், சுகாதார அதிகாரிகள் என 60 உத்தியோகத்தர்கள் இணைந்து இந்த சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இந்த சோதனை நடவடிக்கை மாவட்டம் முழுவதும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி நகரில் காணப்பட்ட 69 உணவு நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், இதில் 41 வர்த்தக நிலையங்களில் இருந்து 73 வகையான பாவனைக்கு உதவாத உணவுப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன. 23 வகையான பொருட்கள் அழிக்கப்பட்டதுடன் ஏனையவைகளின் மாதிரிகள் ஆய்வுக்காக கொழும்பிலுள்ள மருத்துவ ஆய்வு மையத்திற்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மகாராணி ஒரு கிறிஸ்தவராக...

தாய்லாந்து, மியன்மார், கம்போடியா ஆகிய நாட்டுத் தலைவர்களுடன் இணைந்து மகாராணியின் முயற்சியில் 2500ஆவது புத்த ஜயந்தி விழா நடத்தப்பட்டது என்பது பலரும் அறியாத உண்மை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் நினைவு கூர்ந்தார்.

பிரிட்டன் மகாராணியின் மறைவுக்காக மூன்றாம் சார்ள்ஸ் மன்னர் மற்றும் அரச குடும்ப உறுப்பினர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் பாராளுமன்றத்தில் நேற்று (23) வெள்ளிக்கிழமை அனுதாப பிரேரணை சமர்பிக்கப்பட்டது. இதில் இணைந்து கொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதியாக பதவியேற்றதை தொடர்ந்து எனக்கு கிடைத்த வாழ்த்து மடல்களில் இரண்டாம் எலிசபெத் மகாராணி அனுப்பிய வாழ்த்து மடல் மிகவும் விசேடமானது. அது அவரிடமிருந்து கிடைத்த இறுதி வாழ்த்து மடலாகும்.

இலங்கை, இங்கிலாந்து, பொதுநலவாய நாடுகள் மற்றும் உலகிற்கு இரண்டாம் எலிசபெத் மகாராணி செய்தவற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாகும்.

சிலோனின் மகாராணியாக அவர் இருந்த காலப்பகுதியில் நாட்டில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. சிலோன் சிறிலங்காவானது. இவரது ஆட்சியின் கீழ் மிகச்சிறந்த அரசியல் தலைவர்கள் உருவானார்கள். தேர்தலில் 1956 இல் வெற்றிக்கண்டது. இனப்பிரச்சினை தோற்றம் பெற்றது. இலவசக் கல்வியைப் பெறும் புதிய தலைமுறையொன்று உருவானது. பொருளாதாரம் அரச கட்டுப்பாடுக்குள்ளானது. இரண்டு சதித்திட்டங்கள் மற்றும் தெற்கில் ஆயுத எழுச்சியின் ஆரம்பம் என்பன அவ்வாறான குறிப்பிட்டுக் கூறும்படி மாற்றங்களாகும்.

மகாராணி தீவிரமான கிறிஸ்தவராக இருந்த போதிலும் அவர் 1815 அம் ஆண்டின் கண்டி பிரகடனத்துக்கமைய பௌத்த மதத்தை பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். நாட்டின் தலைவரென்ற வகையில் தாய்லாந்து, கம்போடியா, லாவோஸ் ஆகிய நாட்டு அரசர்கள் மற்றும் பர்மாவின் அப்போதைய ஜனாதிபதி ஆகியோருடன் இணைந்து 2500ஆவது புத்த ஜயந்தியை கொண்டாட மகாராணி எடுத்த முயற்சி பலரும் அறியாதவொரு விடயமாகும்.

இங்கிலாந்தை விஞ்சி உலகலாவிய சின்னமாக அடையாளப்படுத்தப்படும் மிகப் பெரிய சொத்தான இரண்டாம் எலிசபெத் மகாராணி இல்லாமல் பிரித்தானியா தனது அதிஷ்டத்தை தேடும் பயணத்தை ஆரம்பித்துள்ளது. மகாராணியின் பெயரிடப்பட்ட யுத்தக் கப்பலிலும் பார்க்க 100 மடங்கு பலம் பொருந்தியவர் அவர்.எனவே இலங்கை சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களை மூன்றாம் சார்ள்ஸ் மன்னர் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

# கிழக்கின் குரல்



# மட்டு.மாவட்ட விவசாயிகளுக்கு 4,000 மெட்ரிக் தொன் யூரியா உரம்





மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு 4000 மெட்ரிக் தொன் யூரியா உரம் தருவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர உறுதியளித்துள்ளார். மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் சுற்றாடல் அமைச்சர் ஆபிஸ் நஸீர்,இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் ஆகியோருக்கிடை நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலில் மட்டு. மாவட்ட விவசாய அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். கலந்துரையாடலில் உடனடித் தேவையாக உள்ள யூரியா பிரச்சினை தொடர்பாக வினவியபோது, இரண்டு நாளைக்கு முன் முதற் கட்டமாக 2,500 மெட்ரிக் தொன் யூரியா தருவதாக ஒப்புக் கொண்டனர்.நேற்றைய பேச்சுவார்த்தையில் அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் முதற்கட்டமாக கிட்டத்தட்ட 4000 மெட்ரிக் தொன் தருவதாக ஒப்புக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எமது விவசாயிகளின் பிரச்சினைகளுக்கான தீர்வு கிடைக்கும் வரை எமது நடவடிக்கைகள் தொடரும் என்று தெரிவித்த இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் மக்களுக்கான தீர்வை நோக்கியே நாம் பயணிப்போம் என்றார்.

## காத்தான்குடி கடற்கரை சிரமதான மூலம் துப்புரவு



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கடற்கரை பகுதி நேற்று (23) வெள்ளிக்கிழமை சிரமதானத்தின் மூலம் துப்புரவு செய்யப்பட்டது

சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு கரையோரம் பேணல் திணைக்களம் காத்தான்குடி பிரதேச செயலகம் காத்தான்குடி நகர சபை இணைந்து இந்த சிரமதான நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன் போது காத்தான்குடி கடற்கரை பிரதேசத்திலுள்ள கரையோரப் பகுதி சிரமதானத்தின் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

இந்த சிரமதான நிகழ்வை காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய சிறீதரன் ஆரம்பித்து வைத்ததுடன் இந்த சிரமதானத்தில் கரையோரம் பேணல் திணைக்களத்தின் காத்தான்குடி பிரதேசத்திற்கான உத்தியோகத்தர் திருமதி மலர் விழி, காத்தான்குடி பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் எம்.எம். ஜரூப் உட்பட கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் நிரந்தர வலயக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றமைக்காகவும்,இவ் வலயம் முதன் நிலை பெறுவதற்கு அர்ப்பணிப்புகளுடன் பணியாற்றி வருவதையும் பாராட்டி ஏ.எம்.றஹ்மத்துல்லாவுக்கு தேசிய அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தவிசாளரும், அக்கரைப்பற்று பள்ளிக் குடியிருப்பு அஸ் ஸபா ஜுனியர் வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி குழுவின் செயலாளருமான எஸ்.எம்.லாபிரினால் பொன்னாடை போர்த்தியும், நினைவுச் சின்னம் மற்றும் வாழ்த்துப்பத்திரம் வழங்கி கௌரவித்த போது... (படம்: ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

## காத்தான்குடியில் ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் திடீர் சோதனை

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடியில் உணவு தயாரிப்பில் ஈடுபடும் ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், பேக்கரிகள் உணவு தயாரிக்கும் இடங்கள் (22) வியாழக்கிழமை சோதனைக்குட்படுத்தப்பட்டன உணவு பாதுகாப்பு இல்லாமல் மனித பாவனைக்குதவாத உணவுகள் காணப்பட்ட சில ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், பேக்கரிகள் உணவு தயாரிக்கும் இடங்களின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு அவ்வாறான இடங்களின் உரிமையாளர்களுக்கு இவைகளை சீர் செய்வதற்காக கால அவகாசமும் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சுகுணன் தலைமையில் அவரது வழிகாட்டலில் இந்த சோதனை நடவடிக்கைகள் இடம் பெற்றன.

இதில் சுகாதார வைத்திய அதிகாரிகள் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுகாதார அதிகாரிகள் என 60 உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இந்த சோதனை நடவடிக்கை மாவட்டம் முழுவதும் மேற் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதில் ஒரு கட்டமாக காத்தான்குடி சுகாதார அலுவலகப் பிரிவிலுள்ள உணவு தயாரிப்பில் ஈடுபடும் ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், பேக்கரிகள் உணவு தயாரிக்கும் இடங்கள் இதன்போது சோதனை செய்யப்பட்டதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சுகுணன் தெரிவித்தார்.



பாகிஸ்தான் அரசாங்கம் சார்பாக இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்கி, சாய்ந்தமருது அல்சுபைதா நலன்புரி அமைப்பிலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை அதன் தலைவர் முன்னாள் பிரதேச செயலாளரும், பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினருமான ஏ.எல்.எம்.சலீமிடம் வழங்கி வைப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: சவளக்கடை குறூப் நிருபர்)

## திருமலை மாவட்டத்தில் உணவின்மை, போஷாக்கின்மையை ஒழிக்க நடவடிக்கை

**றொட்டவெவ குறூப் நிருபர்**



மாவட்ட அரசாங்க அதிபர்

மாவட்டத்திலிருக்கக் கூடிய எந்தவொரு குடிமகனும் உணவில்லாமல் அதேபோன்று எந்தவொரு பிள்ளையும் போஷாக்கின்மையால் வாடக்கூடிய ஒரு நிலவரம் இல்லாமல் செய்யப்பட வேண்டும் என்று திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான B. H. N. ஜயவிக்ரம தெரிவித்தார்.

ஜனாதிபதியுடைய வழிகாட்டலின் கீழ் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷக்கின்மை ஒழித்தல் தொடர்பான 07 குழுக்கள் தேசிய ரீதியில் தற்போது உருவாக்கப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் உணவுப் போஷாக்கு மற்றும் பாதுகாப்பு தொடர்பான மாவட்ட ஒருங்கிணைந்த குழு நேற்று திருகோணமலை மாவட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டதுடன் அதன் முதலாவது கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது.

கிராமிய ரீதியாக உருவாக்கப்பட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பான குழு கிராமத்திலே உணவின்றி இருப்பவர்களது தகவல்கள் மற்றும் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களது தகவல்களை கிரமமான முறையில் சேகரித்து அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

அவ்வாறானவர்கள் அற்ற ஒரு பிரதேசத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பு அக் குழுக்களையே சாரும். எனவே அதற்கான வழிவகைகளை செய்து கொடுக்க வேண்டிய தேவை அந்தக் குழுக்களுக்கு காணப்படுவதாக இதன்போது அரசாங்க அதிபர் தெளிவுபடுத்தினார்.

எதிர்வரும் வாரத்தில் மாவட்டத்தில் போஷக்கின்மையால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய சிறுவர்கள் மற்றும் உணவின்றி தவிக்கக் கூடிய குடும்பங்களுடைய விபரங்கள் சேகரிக் கப்படவுள்ளன. இத்தகவல்கள் சேகரிக்கப்பட்டு உரிய பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் உரிய செயற்பாடுகளை கிராமிய மற்றும் பிரதேச செயலக குழுக்களும் ஏனைய பங்குதாரர்களை இணைத்து செயற்படல் வேண்டும்.

## அம்பாறை மாவட்டத்தில் சுவீகரிக்கப்பட்ட காணிகளை மீள வழங்க நடவடிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**



அம்பாறை மாவட்டத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட நெற் செய்கை காணிகளை மீள காணி உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

மிக நீண்டகாலமாக குறித்த காணிகளை பராமரித்து வரும் சட்டரீதியிலான காணி உரிமத்தைக் கொண்டுள்ள ஏழை விவசாயிகளின் காணிகளை வனஜீவராசிகள், வனஇலாகா திணைக்களங்கள் சுவீகரித்து அதனை வர்த்தமானி ஊடாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இக்காணிகளை விடுவிப்பது தொடர்பாக வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் வன இலாகா, வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோருடன் நடைபெற்ற காணி விடுவிப்பு தொடர்பான இறுதிக் கட்ட பேச்சுவார்த்தையில் சுவீகரிக்கப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ள காணிகளை உரிய விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அமைச்சர் மஹிந்த அமரவீர வாக்குறுதியளித்துள்ளதாக தெரிவித்தார்.

2010, 2016 ஆகிய காலப்பகுதியில் வனஇலாகா மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் நெற்செய்கை காணிகளை சுவீகரித்து வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது.

மூன்று தசாப்த கோரிக்கையாக இருந்து வரும் இக் காணிகளை விடுவித்து உடனடியாக காணி உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்ததாக தெரிவித்தார்.

சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்து அக்காணியினை உரியவர்களிடம் ஒப்படைக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

## திருகோணமலை –வெள்ளைமணல் நீரோட்டுமுனை கிராமத்திற்கு குடிநீர்

**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்குட்பட்ட குடாக்கரை பகுதியில் தேசிய நீர் வளங்கள் வடிகாலமைப்பு சபையின் மூலம் விநியோகிக்கப்படுகின்ற நீர் விநியோகம் அனைத்து குடும்பங்களுக்கும் வேகமாக வருவது இல்லை என்றும் தினந்தோறும் நீர் விநியோகிக்கப்படுவதில்லை என்றும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை பெற்றுத் தருமாறும் அப்பகுதி சங்கங்கள் மற்றும் நீரோட்டுமுனை 3வது ஒழுங்கை பொதுமக்கள் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் முகமட் நௌபரிடம் எழுத்து மூலமான கோரிக்கையினையும் முன் வைத்திருந்தனர்.

இதற்கான நிரந்தர தீர்வினை பெற்றுக்கொடுக்கும் ஒரு அங்கமாக குடாக்கரை பிரதேசத்தில் நீரோட்டுமுனை 3வது ஒழுங்கையில் வாழும் மக்கள் குடிநீர் வசதியினை பெற்றுக் கொள்ளும் வகையில் ISRC Sri Lanka தொண்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆழ்துளை குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் தொகுதி பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் முகமட் நௌபர் மற்றும் மூத்த சமூக சேவையாளர் ஜெய்னீன் ஆகியோரால் நேற்று முன்தினம் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.



## அட்டாளைச்சேனை லங்கா சதொச கிளையை மீளத் திறக்க கோரிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**

அட்டாளைச்சேனையில் மூடப்பட்டுள்ள லங்கா சதொச கிளையை மீளத் திறக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 2016ம் ஆண்டு ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச மக்களை மையப்படுத்தி திறக்கப்பட்ட லங்கா சதொச கிளை மூடப்பட்டுள்ளதால் பொது மக்கள் பல சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினை கருத்திற் கொண்டு அரசாங்கத்தினால் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை குறைந்த விலையில் லங்கா சதொச கிளைகளின் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மக்கள் இன்றைய இக்கட்டான கால கட்டத்தில் கூட லங்கா சதொச மூலம் அதன் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பாலமுனை, ஒலுவில், அட்டாளைச்சேனை பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு சுமார் 07 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள அக்கரைப்பற்று சதொச கிளைக்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பொருள் கொள்வனவுக்குச் சென்றாலும் அங்கு பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் மருந்துப்பொருட்களுக்கு தட்டுப்பாடு

## அத்தியாவசிய மருந்துகள், உள்ளடங்கலாக 43 மருந்துகளுக்கு தட்டுப்பாடு

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**




முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சில மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன. முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் முக்கியமாக சிறுநீரக மற்றும் இருதய செயலிழப்பு நோயாளர்களுக்கு பயன்படுத்தும் அத்தியாவசிய மருந்துகள்,உள்ளடங்கலாக 43 மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாடு காரணமாக முக்கிய மருந்துப்பொருட்களுக்கு அரசமருத்துவமனைகளில் தட்டுப்பாடு நிலவுகின்றன. தனியார் மருந்தகங்கள் சிலவற்றிலும் முக்கிய மருந்துகளுக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

பிரசவ தாய்மார்கள் மற்றும் சத்திரசிகிச்சைகளுக்கு உட்படுவோருக்கான இரத்தபோக்கிற்கு பயன்படுத்தப்படும் மருந்துகள், சத்திரசிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் தையல் நூல்,உள்ளிட்ட பல்வேறு பட்ட நுண்ணுயிர் கொல்லி மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறுநீரக நோயாளர்கள் சிகிச்சைக்காக வந்தபோது அவர்களுக்கு செய்யப்படும் சிகிச்சையின் நேர அளவினை குறைத்துள்ளனர். முன்னர் 4 மணிநேரமாக இருந்ததாகவும் தற்போது மருந்து தட்டுப்பாடு காரணமாக 2 மணிநேரத்திற்கு குறைத்துள்ளதாக பாதிக்கப்பட்ட நோயாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# வவுனியா – பட்டானிச்சூர் பகுதியில் இளைஞர் குழு தாக்குதல், ஒருவர் படுகாயம்

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா பட்டானிச்சூர் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றில் இளைஞரொருவர் மீது குழுவொன்று நேற்றுமுன்தினம் (22.09) தாக்குதல் நடத்தியுள்ளதுடன் அவரது தொலைபேசியையும் பறிமுதல் செய்து, மிரட்டி கடிதம் ஒன்றையும் பெற்றுள்ளது.

படுகாயமடைந்த இளைஞன் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அப்பகுதியிலிருந்த இளைஞர்களும் ஒன்றுகூடியமையால் இரு தரப்பிற்கும் இடையில் முறுகல் நிலையும் ஏற்பட்டிருந்தது. இன முறுகலாக உருவெடுக்கவிருந்த மோதல் நெளுக்குளம் பொலிஸாரால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இச்சம்பவத்தில் காயமடைந்த இளைஞன் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைபாட்டினை பதிவு செய்துள்ளதுடன், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.



இச்சம்பவத்தில் தாக்குதலுக்குள்ளான தமிழ் இளைஞரும், சகோதர முஸ்லிம் இன பெண் ஒருவரும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஒரே இடத்தில் பணியாற்றியதாகவும் இருவரும் காதலித்ததாகவும் தெரியவருகின்றது. அதன் தொடர்ச்சியாக பெண்ணை சந்திக்க வர்த்தக நிலையத்திற்கு சென்ற போதே இளைஞன் பெண்ணின் உறவினர்களால் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இதேவேளை, தாக்குதல் சம்பவம் தொடர்பாக செய்தி அறிக்கையிடச் சென்ற வவுனியா பிராந்திய ஊடகவியலாளர் ஒருவரும் அச்சுறுத்தப்பட்டதுடன், அவரது கடமைக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டதாக தெரிவித்து நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளார். தாக்குதல் சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழில் பாடசாலை மாணவன் ஹெரோயினுடன் கைது

**யாழ்.விசேட நிருபர்**

ஹெரோயின் போதைப்பொருளுடன் பாடசாலை மாணவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

யாழ்.நகர் பகுதியில் அமைந்துள்ள ஆண்கள் பாடசாலை மாணவன் ஒருவனே யாழ்ப்பாண பொலிஸாரினால் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளான்.

கைது செய்யப்பட்ட மாணவனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பருத்தித்துறை கடற்கரையில் 42 கிலோ கஞ்சா இராணுவத்தால் மீட்பு

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

இந்தியாவிலிருந்து வடபகுதி கடற்பரப்பு ஊடாக இலங்கைக்கு கடத்தப்பட்ட 42 கிலோகிராம் கேரள கஞ்சா பருத்தித்துறையிலுள்ள இராணுவத்தினரினால் மீட்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, சக்கோட்டை கடற்கரையில் படகிலிருந்து கஞ்சாப் பொதியை இறக்கிக் கொண்டிருந்த போது நேற்று வெள்ளிக்கிழமை (23) அதிகாலை 4.30 மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படையினர் கஞ்சா பொதியை கைப்பற்றியுள்ளனர். இதேவேளை படையினர் வருவதை அவதானித்த கடத்தல் காரர்கள் ஒரு பொதியை மட்டும் இறக்கிய நிலையில் மீண்டும் கடற்பரப்பிற்குள் படகுடன் தப்பிச் சென்றுள்ளனர்.

# வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய கொடியேற்றம்

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

வடமராட்சி, துன்னாலை,வல்லிபுர ஆழ்வார் ஆலய கொடியேற்ற திருவிழா இன்று சனிக்கிழமை(24) காலை 8. 45 மணிக்கு இடம்பெறும். முன்னதாக அதிகாலை 5.00 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகி காலை 8.45 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும்.

அதனைத்தொடர்ந்து ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை குறுக்கட்டு விநாயகர் தரிசனமும், இரண்டாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெண்ணை திருவிழாவும், மூன்றாம் திகதி திங்கட்கிழமை துகில் திருவிழாவும், நாலாம் திகதி செவ்வாய்க்கிழமை பாம்புத் திருவிழாவும், 5ஆம் திகதி புதன்கிழமை கம்சன் போர் திருவிழாவும், ஆறாம் திகதி வியாழக்கிழமை வேட்டை திருவிழாவும், ஏழாம் திகதி வெள்ளிக்கிழமை சப்பர திருவிழாவும், 8ஆம் திகதி சனிக்கிழமை தேர் திருவிழாவும், 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சமுத்திர தீர்த்த திருவிழாவும், மறுநாள் பத்தாந் திகதி திங்கட்கிழமை கேணித் தீர்த்தமும் இடம்பெறுமென ஆலய அறங்காவல சபையினர் அறிவித்துள்ளனர்.

# மயிலிட்டி பகுதியில் காணி விடுவிப்பை வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டம்

**யாழ். விசேட நிருபர்**

மயிலிட்டி பகுதியில் காணி விடுவிப்பை வலியுறுத்தி நேற்றைய தினம் கவனயீர்ப்பு போராட்டமொன்று இடம்பெற்றது. வலி வடக்கு முன்கொடியேற்ற சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைந்த குழுவினால் கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தமது சொந்த நிலங்களை விடுவிக்க கோரி வலி. வடக்கு மீள்குடியேற்ற சங்கத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் மயிலிட்டி பகுதியில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கடந்த 30 வருடங்களாக வலி.வடக்குப் பகுதியில் விடுவிக்கப்படாமல் இருக்கும் ஏனைய மூவாயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டதுடன் மக்களை அவர்களுடைய சொந்த காணிகளில் குடியமர்த்தி அரசாங்கம் வீட்டுத் திட்டத்தினை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

மேலும் தமது குடியேற்ற நிலங்கள், விவசாய நிலங்களிலிருந்து வெளியேற்றி விட்டு, இராணுவத்தினர் எமது பிரதேசங்களை உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தியதாகவும் மீள் குடியேற அனுமதிக்கவில்லையெனவும் தெரிவித்தனர்.



எமது பிரதேசத்தில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு உயர்பாதுகாப்பு வலயங்களில் உள்ளன. இதனால் விவசாயத்தை மேற்கொள்ள கடந்த 30 ஆண்டு காலமாக வாழ்வாதாரங்களுக்காக வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகிறோம். நாம் விவசாயங்களை மேற்கொண்டு வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஏதுவாக எமது காணிகளை உடனடியாக விடுவிக்க அரசாங்கம் நடவடிக்களை மேற்கொள்ள வேண்டும்.

அதேவேளை எமது குடியேற்ற நிலங்களும் உயர் பாதுகாப்பு வலயங்களினுள் உள்ளமையால், நாம் தொடர்ந்தும் வாடகை வீடுகள், உறவினர்கள் வீடுகளில் வாழ்கின்றோம். எனவே எமது காணிகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரினார்கள்.

# வீடுகளை உடைத்து திருடிய குற்றச்சாட்டில் மூவர் கைது

## ஏழு இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் மீட்பு

**யாழ்.விசேட நிருபர்**



யாழ்ப்பாணம் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெற்று வந்த திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வீடுகளில் ஆட்கள் இல்லாத வேளைகளில் வீடுகளின் கதவுகளை உடைத்து உட்புகுந்து அங்கிருந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளன. இச்சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாடுகளின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் மூன்று சந்தேகநபர்களை அடையாளம் கண்டு கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து வெற்று எரிவாயு சிலிண்டர், எரிவாயு அடுப்பு, தொலைக்காட்சி பெட்டி, நீர் இறைக்கும் மின் மோட்டார் உள்ளிட்ட ஏழு இலட்ச ரூபாய் பெறுமதியான பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. அதேவேளை சந்தேக நபர்களுக்கு எதிராக திருட்டுக்குற்றச்சாட்டு தொடர்பிலான வழக்கு விசாரணைகள் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நிலுவையில் உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அனுமதிப்பத்திரமின்றி மணலேற்றிச் சென்ற நான்கு சாரதிகள் கைது

**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணலேற்றிச் சென்ற நான்கு டிப்பர்களையும் அதன் நான்கு சாரதிகளையும் கோப்பாய் போக்குவரத்து பொலிஸார் நேற்று காலை கைது செய்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, கோப்பாய் சந்திக்கு அண்மையிலுள்ள பகுதியில் போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை நான்கு டிப்பர் வாகனங்களை வழிமறித்து சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது அனுமதிப்பத்திரம் இன்றி மணலேற்றிச் சென்றமை தெரியவந்தது.

இதனையடுத்து நான்கு டிப்பர் வாகனங்களையும் டிப்பரை செலுத்தி வந்த கிளிநொச்சி மற்றும் விசுவமடு பகுதியைச் சேர்ந்த நான்கு சந்தேகநபர்களையும் கோப்பாய் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# சட்டவிரோத ஒளிபாய்ச்சி சுருக்குவலை தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு தண்டப்பணம்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியில் சட்டவிரோத ஒளிபாய்ச்சி சுருக்குவலைத் தொழிலில் ஈடுபட்ட 7 பேருக்கு ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக இத்தொழில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தது.

இவ்வழக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை ஏற்றுகொண்டமையால் 7 பேருக்கும் தலா 20 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. சட்டவிரோதமாகப் பயன்படுத்திய சுருக்குவலையும் தீயிட்டு எரிக்கப்பட்டது.


# இராவணன் காப்பிய நாயகன் அவன் இலங்கைக்குரியவன்

## சிவசேனா அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன்

**ஓமந்தை விஷேட நிருபர்**

இராவணன் காப்பிய நாயகன். அவன் இலங்கைக்குரியவன், இலங்கையில் வாழ்ந்தான் என்பதை இலங்கை அரசு ஏற்றது என இலங்கை சிவசேனா அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இராவணன் என்ற மன்னனும் இல்லை சிவ வழிபாடும் கிடையாது என முன்னாள் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்திருந்தார்.



குறித்த கருத்துக்கு பதிலடி வழங்கி இலங்கை சிவசேனா அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தனால் நேற்று (23) ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராமாயணம் காப்பியம் தெற்கு ஆசியாவிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் இராமாயணக் காப்பிய நாயகர் சிலைகளாகச் சிற்பங்களாகக் கலைகளாக நடனங்களாக நாட்டியங்களாக இசையாக ஓவியங்களாகப் பரந்து கிடக்கின்றன.

இராவணன் காப்பிய நாயகன். அவன் இலங்கைக்குரியவன், இலங்கையில் வாழ்ந்தான் என்பதை இலங்கை அரசு ஏற்றது. பூமியைச் சுற்ற இலங்கை அனுப்பிய செயற்கைக் கோளுக்கு இராவணனின் பெயர். தம் முன்னோர் இராவணன் வழிவந்தவர் என்பதை ஏற்ற சிங்கள மக்கள், தாம் அமைத்து நடத்தும் இயக்கத்தை இராவண சேனை என்பர்.

# மோட்டார் சைக்கிள் மோதி பாடசாலை மாணவி படுகாயம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரி பொலிஸ்பிரிவுக்குட்பட்ட சங்கத்தானைப் பகுதியில் நேற்றுமுன்தினம் 22/09 வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஏ9 வீதியால் துவிச்சக்கரவண்டியில் தனியார் வகுப்பிற்கு சென்ற மாணவியை மோட்டார் சைக்கிள் மோதியதில் மாணவி தலையில் படுகாயமடைந்துள்ளார்.

சங்கத்தானை சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 13 வயதான பாடசாலை மாணவி ஒருவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




## சௌமிய மூர்த்தி தொண்டமானின் 109 ஆவது ஜனன தினம்









இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் 109 ஆவது ஜனன தினத்தையும், இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 159ஆவது வருட பூர்த்தியையும் முன்னிட்டு ஹற்றன் தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தில் இரத்ததான நிகழ்வொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஹற்றன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் வதிவிட முகாமையாளர் விஜேசிங்க, ஹற்றன் பொலிஸ் நிலைய உதவி அதிகாரி பிரயந்த விக்கிரமநாயக்க, சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி ரஞ்ஜித் ஜெயசேன, வைத்தியர் டி.எஸ்.டி.செனவிரத்ன, சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் நிர்வாக பிரதி பணிப்பாளர் சத்திவேலு, அதன் அபிவிருத்தி பிரதி பணிப்பாளர்கள் தியாகராஜா, ஜீவனந்தராஜா மற்றும் நோர்வூட் விளையாட்டு அரங்கின் வதிவிட முகாமையாளர் கெப்ரியல் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.
(படங்கள்: தலவாக்கலை குறூப் நிருபர்)

## உருளைக்கிழங்கு ஏற்றிச்சென்ற லொறி விபத்து; ஒருவர் படுகாயம்

**கினிகத்தேனை தினகரன் நிருபர்**



வெலிமடையிலிருந்து கொழும்புக்கு உருளைக்கிழங்குகளை ஏற்றிச்சென்ற கனரக வாகனமொன்று நேற்று விபத்துக்குள்ளாகியுள்ளது. ஹற்றன் – கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை கடவளை பகுதியில் வைத்து கனரக வாகனம் வீதியை விட்டு விலகி குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று காலை 6.30 மணியளவில் இவ்விபத்து நேர்ந்துள்ளதாக கினிகத்தேனை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர். சாரதியின் கவனயீனமே விபத்துக்குக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

லொறியின் சாரதியும், உதவியாளரும் இதில் பயணித்துள்ளதாகவும், உதவியாளர் படுங்காயங்களுக்குள்ளாகி நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். லொறியிலிருந்த உருளைக்கிழங்கு வகைகளை பிரதேச மக்களின் உதவியுடன் மற்றுமொரு லொறிக்கு ஏற்றிச் செல்ல நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இவ்விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மலையக சமூகத்திற்காக அரசியல் கட்சி பேதங்களை மறந்து ஒத்துழைக்க வேண்டும்

### ஜீவன் தொண்டமான் எம்.பி

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

மஸ்கெலியா பெருந்தோட்ட யாக்கத்திற்கு எதிராக மேற்கொண்டு வந்த தொழிற்சங்க போராட்டம் நேற்றுடன் (23) நிறைவுபெற்றுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஜீவன் தொண்டமான் விடுத்துள்ள அறிக்கையில் இது ஒரு முழுமையான வெற்றியாக பார்க்கின்றோம் , மஸ்கெலியா பெருந்தோட்டயாக்கம் இ.தொ.கா தொழிலாளர்கள் சார்பில் முன் வைத்த அனைத்து கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

அதேநேரத்தில் மக்களுக்கு கிடைக்க வேண்டிய சம்பள நிலுவை தொகை அந்தந்த தோட்ட நிர்வாகத்தின் ஊடாக தொழிலாளர்களுக்கு கிடைக்கும். மேலும் இது இ.தொ.காவின் பேரம் பேசும் சக்திக்கு கிடைத்துள்ள மாபெரும் வெற்றியாகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் இந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்த மக்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்விடயத்தில் மாற்று தொழிற்சங்க தலைவர்கள்,தலைவிகள் எல்லோரும் ஒத்துழைத்து எமது மக்கள் பலத்தை காட்டியுள்ளனர்.

அதே சமயத்தில் அரசியல்ரீதியாக எந்த கட்சியும் பிரிந்து இருந்தாலும் நமது சமூகத்திற்காக எல்லோரும் பொதுவாக ஒத்துழைத்தால் மாத்திரமே எம் பலம் என்னவென்று கம்பனிகளுக்கு காட்ட முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார் .



இன்றைக்கு மஸ்கெலியாவுக்கு கிடைக்கப்பெற்ற வெற்றி மலையகத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். மஸ்கெலியா பெருந்தோட்டத்திற்கு நடந்த விடயம் நாளைக்கு எந்தவொரு பெருந்தோட்டத்திற்கும் நடக்கலாம். ஆகவே ஒன்றிணைந்து செயற்படுவோம் எனவும் வலியுறுத்தியுள்ளார்.



மஸ்கெலியா தோட்டப்பகுதிகளுக்கு நேற்று(23.09.2022) களப்பயணம் மேற்கொண்ட ஜீவன் தொண்டமான் எம்.பி தொழிலாளர்களுடன் கலந்துரையாடி, மஸ்கெலிய தொழிற் சங்க நடவடிக்கைக்கு கிடைத்த வெற்றியை பற்றி மக்களுக்கு தெளிவுப்படுத்தினார்.
(படம்: ஹற்றன் சுழற்சி நிருபர்)


## குளவிக் கொட்டினால் 6 மாணவர்கள் பாதிப்பு

**புசல்லாவை தினகரன் நிருபர்**

தெல்தெனிய ரங்கலை நாவலர் தமிழ் வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்களும் குளவிக் கொட்டுக்கு இலக்காகி தெல்தெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே, குளவிக் கொட்டுக்கு இலக்காகினர். பாடசாலையின் பிரதான மண்டபத்துக்குள் நுழைந்த குளவிகள் மாணவர்களைக் கொட்டியுள்ளன.

இதில் ஆறு மாணவர்களும் நான்கு ஆசிரியர்களும் இரண்டு பெற்றோர்களும் அடங்குகின்றனர். குளவிக் கொட்டுக்கு இலக்கானவர்களில் தொடர்ந்தும் நான்கு பேர் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

## இ.தொ.காவால் முன்மொழியப்பட்ட நிபந்தனைகளுக்கு மஸ்கெலிய பெருந்தோட்ட நிறுவனம் இணக்கம்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸினால் முன்மொழியப்பட்ட 16 நிபந்தனைகள் கொண்ட உடன்படிக்கைக்கு மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனி உறுதிப்படுத்தி இணக்கம் தெரிவிப்பதாக இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் மற்றும் பொதுசெயலாளர் ஜீவன் தொண்டமான் ஆகியோருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது. மஸ்கெலிய பெருந்தோட்ட நிறுவனம் இணக்கம் தெரிவித்ததை அடுத்து இ.தொ.கா வேலைநிறுத்த போராட்டத்தை வாபஸ் பெற்றதோடு, தொழிற்சாலையிலிருந்து தேயிலையை அனுப்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



கண்டி மடவெல மதீனா தேசிய பாடசாலையினால் ஏற்பாடு செய்யப்பட்ட க.பொ.த சாதாரண தரப்பரீட்சை மாணவ மாணவிகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கான கல்வி மேம்பாட்டுக்கான உளவியல் வழிகாட்டல் நிகழ்வு மதீனா தேசிய பாடசாலை அஷ்ரப் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் வளவாளராக பாசிர் மொஹிதீன் கலந்து கொண்டு நிகழ்வை நடத்துவதையும் கலந்துகொண்டவர்களின் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படம்: பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)

## நவராத்திரி போட்டி நிகழ்வுகள்

**பதுளைதினகரன் விசேட நிருபர்**

பண்டாரவளை இந்து இளைஞர் மன்றம், வருடந்தோறும் பாடசாலை மாணவர்களை ஆன்மீகத்துறையில் ஊக்கப்படுத்தும் வகையில், நவராத்திரி போட்டி நிகழ்வுகளை நடாத்துகின்றது.

நவராத்திரி போட்டி நிகழ்வுகள் எதிர்வரும் அக்டோபர் 01ஆம் திகதி ,சனிக்கிழமை, காலை 8 மணிமுதல், பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியில் இடம்பெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. நிகழ்வுகள் யாவும் மன்றத்தலைவர் என்.செல்வராசு தலைமையில் இடம் பெறவுள்ளதோடு, பண்டாரவளை கல்வி வலய 60 பாடசாலைக்குட்பட்ட மாணவர்கள், பிரதேச அறநெறி பாடசாலை மாணவர்கள் அடங்கலாக சுமார் 1200 மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இப்போட்டிகளுக்கு, இந்து சமய ஆசிரிய ஆலோசர்கள் மற்றும் அசிரியர்கள் நடுவர்களாக கலந்துகொள்ளவுள்ளனர். கலந்து கொள்ளும் சகல மாணவர்களுக்கும் மதிய உணவுக்கான ஏற்பாடுகள், மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கினிகத்தேனையில் சட்டவிரோத கட்டடங்கள்; மக்கள் எதிர்ப்பு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**



கினிகத்தேன பகுதிகளில் சட்ட விரோத கட்டட நிர்மாணம் செய்ய உள்ளதை எதிர்த்து ஆர்ப்பாட்டம்.

கினிகத்தேன பகுதிகளில் சட்டவிரோத கட்டட நிர்மாணம் மேற்கொள்வதற்கு மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று காலை 11.30. மணிக்கு கினிக்கத்தேன எல்ல பகுதியில் சுற்றுலா விடுதி அமைக்கப்படுவதை எதிர்த்தும் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் முறையாக அனுமதி பெறாமல் பாரிய பின் விளைவுகள் ஏற்படும் வகையில் அப்பகுதியில் சுற்றுலா விடுதி அமைக்க ஏற்பாடு நடைபெற்று வருவதாகவும் அதனை உடனடியாக தடுக்க வேண்டுமென கோரிக்கை முன்வைத்தும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நேற்று காலை 11.30. மணிக்கு கினிகத்தேன எல்லவுட பகுதியில் சுற்றுலா விடுதி அமைக்கப்படுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் முறையாக அனுமதி பெறாமல் பாரிய பின் விளைவுகள் ஏற்படும் வகையில் அப்பகுதியில் சுற்றுலா விடுதி அமைக்க ஏற்பாடு நடைபெற்று வருவதாகவும் அதனை உடனடியாக தடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## மாத்தளை பிரதேச சபையினால் நடமாடும் சேவை

**(பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)**

மாத்தளைபிரதேசசபையினால்பிரதேச அபிவிருத்தியை கருத்திற்கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை இன்று 24 ஆம் திகதி சனிக்கிழமை திக்கிரியா சமூக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நடமாடும் சேவையில் மாத்தளை பிரதேச சபை, மாத்தளை பிரதேச செயலகம், பலபத்வல ஆயுர்வேத மையம், பலபத்வல பொது நூலகம், விவசாய சேவைகள் திணைக்களம், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் மாத்தளை பொலிஸ் போன்ற பல அரச நிறுவனங்கள் கலந்துகொள்ளவுள்ளன.



மத்திய மாகாண சபையின் அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் கடமையாற்றும் சாரதிகளுக்கான “தாபனக் கோவை” தொடர்பான விளக்க பயிற்சி நிகழ்ச்சி (20) கண்டி பல்லேகலையில் மத்திய மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சிப்பிரிவில் இடம்பெற்றதுடன், இந்நிகழ்வில் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிபிரிவின் பணிப்பாளர் திலினி தெஹிகொல்லவும் கலந்துகொண்டு விளக்கமளித்தார்.
(படம்:பூஜாபிட்டிய தினகரன் நிருபர்)

## நீரில் மூழ்கி குடும்பஸ்தர் மரணம்

**தம்புள்ள தினகரன் நிருபர்**

அம்பொக்கன் குளத்திற்கு நீராடச் சென்ற வேளையில் குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி நேற்று உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. நேற்று வெள்ளிக்கிழமை மதியம் 12.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. நீராடச் சென்று நீண்ட நேரமாகியும் தனது கணவர் வீடு திரும்பவில்லையென தேடியுள்ளார். இதனையடுத்து குளத்தில் குளிக்கும் பிரதேசவாசிகள் மேற்கொண்ட தேடுதலில் சடலம் 2.30 மணியளவில் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.




ரோட்டரக்ட் பீஸ் சிட்டி ஹற்றன் மற்றும் மக்கள் வங்கி பொகவந்தலாவ கிளை ஆகியவற்றின் அனுசரணையில் 2021 ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் ஹற்றன் கல்வி வலயத்தில் சிறந்த புள்ளிகளை பெற்ற 20 மாணவிகளுக்கு அவர்களின் சேமிப்பு நோக்கத்தினை அதிகரிக்கவும் அவர்களின் எதிர்கால கல்வி முன்னேற்றத்திற்கு வித்திடும் வகையில் பீஸ் சிட்டி ஹற்றன் கழகத்தின் தலைவி வினோஷா கயாலினி தலைமையில் வங்கி கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்நிகழ்வில் அதிதிகளாக நுவரெலியா கல்வி பணிமனையின் உதவி கல்விப் பணிப்பாளர் சாந்தகுமார் , பொகவந்தலாவ மக்கள் வங்கி கிளை முகாமையாளர் சந்திரகலா , கொழும்பு ரோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவர் ராஜலிங்கம், ரோட்டேரியன் சரவணன் ,பீஸ் சிட்டி ஹட்டன் கழகத்தின் தலைவி வினோஷா கயாலினி ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் சிறந்த புள்ளிகளை பெற்ற மாணவிகளுக்கு பொகவந்தலாவ மக்கள் வங்கி கிளையால் சேமிப்பு புத்தகம் ஆரம்பிக்கப்பட்டதுடன் பதக்கங்களும், பரிசுப்பொருட்களும் வழங்கப்பட்டன. (படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

# டி20 உலகக் கிண்ணத்தின் பின் இலங்கை அணி இந்தியா பயணம்



அவுஸ்திரேலியாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள டி20 உலகக் கிண்ணப் போட்டிக்குப் பின்னர் இலங்கை அணி அடுத்த ஆண்டு ஜனவரியில் இந்தியா சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

அந்த சுற்றுப்பயணம் 3 ஒருநாள் போட்டிகள் மற்றும் 3 டி20 போட்டிகளைக் கொண்டுள்ளது. எனினும் அந்தப் போட்டிகள் நடைபெறும் திகதி மற்றும் மைதானங்கள் இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இதேநேரம் இந்திய அணி இலங்கையுடனான தொடருக்கு முன்னர் நியூசிலாந்தினையும் தமது சொந்த மண்ணில் வைத்து எதிர்கொள்ளவுள்ளது. இந்த தொடரிலும் மூன்று ஒருநாள் மற்றும் மூன்று டி20 போட்டிகள் அடங்குகின்றன.

இந்தப் போட்டித் தொடருக்கு முன்னர் அதாவது வரும் டிசம்பரில் லங்கா பிரிமியர் லீக் தொடரின் மூன்றாவது தொடரை நடத்த ஏற்பாடாகியுள்ளது. இந்தத் தொடரை கடந்த ஓகஸ்டில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தபோதும் நாட்டில் இருந்த பிரச்சினைக்குரிய சூழல் காரணமாக அது டிசம்பர் வரை பிற்போடப்பட்டிருந்தது. ஜனவரியில் இந்திய சுற்றுப் பயணத்தின் பின் இலங்கை அணி சொந்த மண்ணில் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக மூன்று ஒருநாள் போட்டிகளில் ஆடவுள்ளது. பெரும்பாலும் அந்தப் போட்டிகள் எதிர்வரும் ஜனவரி கடைசி மற்றும் பெப்ரவரி ஆரம்பத்தில் நடைபெற வாய்ப்பு உள்ளது.

இந்த ஒருநாள் தொடர் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் ஒருநாள் சுப்பர் லீக்கினுள் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தான் போட்டிக்குப் பின்னர் இலங்கை அணி 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகளைக் கொண்ட நீண்ட சுற்றுப்பயணம் ஒன்றுக்காக நியூசிலாந்து செல்லவுள்ளது. அந்தப் போட்டித் தொடர் எதிர்வரும் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இடம்பெறவுள்ளது.

## பங்களாதேஷ் அணித் தலைவராக ஷகீபுக்கு பதில் நூருல் ஹசன்



ஐக்கிய அரபு இராச்சிய அணிக்கு எதிராக டுபாயில் நடைபெறவுள்ள 2 போட்டிகள் கொண்ட டி20 தொடருக்கான பங்களாதேஷ் அணியை வழிநடத்தும் பொறுப்பு விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரரான நூருல் ஹசனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

டி20 உலகக் கிண்ணத்திற்கு முன் பங்களாதேஷ் கிரிக்கெட் அணி ஐக்கிய அரபு இராச்சிய அணியுடன் 2 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடவுள்ளது.

இந்தத் தொடரில் பங்கேற்கவுள்ள 17 பேர் கொண்ட பங்களாதேஷ் அணியின் விபரத்தை அந்நாட்டு கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

மேற்கிந்திய தீவுகளில் தற்போது நடைபெற்று வரும் கரீபியன் பிரீமியர் லீக்கில் அமேசன் வொரியர்ஸ் அணிக்காக விளையாடி வருகின்ற பங்களாதேஷ் டி20 அணித்தலைவர் சகிப் அல் ஹசன், இந்தத் தொடரில் விளையாட மாட்டார் என அந்நாட்டு கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இதனை அடுத்தே நூருல் ஹசன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் நிறைவடைந்த சிம்பாப்வே அணிக்கெதிரான தொடரின் போது கைவிரல் காயத்துக்குள்ளாகிய நூருல் ஹசனுக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக அவருக்கு இம்முறை ஆசியக் கிண்ணத்தில் விளையாடுகின்ற வாய்ப்பு கிடைக்கவில்லை.

## ரக்பி சங்க விருது விழாவில் கண்டிக்கு சம்பியன் கிண்ணம்



கழகங்களுக்கு இடையிலான ரக்பி லீக் சம்பியன் அணியை பாராட்டும் விருது விழா கொழும்பு கிங்ஸ்வுட் ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்றபோது, சம்பியன் கிண்ணத்தை வென்ற கண்டி விளையாட்டு கழகம் அதற்கான கிண்ணத்தை நிபொன் பெயின்ட் நிறுவனத்தின் பொது முகாமையாளர் நேமன் அபேசிங்கவின் கைகளால் பெற்றுக்கொண்டது.

இலங்கை ரக்பி சங்கம் இந்த ஆண்டுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கழகங்களுக்கு இடையிலான ரக்பி லீக்கில் தோல்வியுறாத அணியாக கண்டி வீரர்கள் சம்பியனாயினர். இதில் இரண்டாம் இடத்தை ஹவ்லொக் விளையாட்டுக் கழகம் பெற்றது.

போட்டித் தொடரின் சிறந்த வீரராக கண்டி விளையாட்டுக் கழகத்தின் தரிந்த ரத்வத்த விருது வென்றதோடு அதற்காக அவர் ஒரு இலட்சம் பணப் பரிசையும் வென்றார். தொடரின் பிளேட் கிண்ணத்தை வென்ற கடற்படை அணி மற்றும் அதன் இரண்டாம் இடத்தைப் பெற்ற விமானப் படை அணியும் பாராட்டப்பெற்றன.

நிபொன் பெயின்ட் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த இந்த விருது விழாவுக்காக இலங்கை ரக்பி சங்கத்தின் அதிகாரிகள், நிபொன் பெயின்ட் நிறுவனத்தின் அதிகாரிகள் மற்றும் ரக்பி வீரர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## பாகிஸ்தான் சாதனை வெற்றி



பாபர் அசாம் ஆட்டமிழக்காது 110 ஓட்டங்கள் மற்றும் மொஹமட் ரிஸ்வான் ஆட்டமிழக்காது 88 ஓட்டங்களை பெற்றதன் மூலம் இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டி20 போட்டியில் பாகிஸ்தான் அணி 10 விக்கெட்டுகளால் வெற்றியீட்டி தொடரை 1–1 என சமநிலைக்குக் கொண்டுவந்தது.

கராச்சியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியில் 200 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் ஆரம்ப ஜோடி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி 3 பந்துகளை மிச்சம் வைத்து வெற்றியீட்டியது.

சொந்த ரசிகர்கள் முன் 62 பந்துகளில் அணித்தலைவர் பாபர் சதத்தை பதிவு செய்ததோடு ரிஸ்வான் தனது ஓட்டங்களை பெறுவதில் 51 பந்துகளுக்கு முகம்கொடுத்து நான்கு சிக்ஸர்களை விளாசி இருந்தார்.

இதன்மூலம் டி20 போட்டியில் விக்கெட் இழப்பின்றி அதிகூடிய வெற்றி இலக்கை எட்டி பாகிஸ்தான் புதிய சாதனை படைத்தது.

டி20 போட்டியில் இங்கிலாந்து அணி 10 விக்கெட்டுகளால் தோல்வியை சந்திப்பது இது முதல் முறையாகும்.

முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 199 ஓட்டங்களை பெற்றது. அணித் தலைவர் மொயின் அலி 23 பந்துகளில் ஆட்டமிழக்காது 55 ஓட்டங்களை விளாசினார்.

## ஸ்கந்தவரோதயா, இந்து கல்லூரிகளுக்கு தோல்வி



இலங்கை–19 வயதின் கீழ் பிரிவு மூன்று பாடசாலை அணிகளுக்கு இடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் கடந்த வியாழக்கிழமை (22) நடைபெற்ற போட்டிகளில் யாழ். ஸ்கந்தவரோதயா, யாழ். இந்து மற்றும் பம்பலப்பட்டி இந்துக் கல்லூரிகள் தோல்விகளை சந்தித்தன.

ஸ்கந்தவரோதயா கல்லூரியானது மொறட்டுவை மெதடிஸ்ட் கல்லூரி அணியை எதிர்கொண்டதுடன், யாழ். இந்துக் கல்லூரி டி லா சலே கல்லூரியையும், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, ஸ்ரீ பங்கானந்த தேசிய பாடசாலை அணியையும் எதிர்கொண்டன.

தெஹிவளை ஜயசிங்க கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஸ்கந்தவரோதயா கல்லூரியின் போட்டியில் அந்த அணி 395 வெற்றி இலக்கை எட்ட முடியாமல் 134 ஓட்டங்களுக்கே சுருண்டது.

அதேபோன்று பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி எதிரணிக்கு 426 ஓட்டங்களை விட்டுக்கொடுத்த நிலையில் 136 ஓட்டங்களுக்கே சுருண்டது. யாழ். இந்துக் கல்லூரியும் 240 வெற்றி இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய நிலையில் 83 ஓட்டங்களுக்கு சுருண்டது.

## பொலிஸ் டேக்வாண்டோ வெற்றியாளருக்கு விருது




பொலிஸ் மற்றும் இலங்கை டேக்வாண்டோ கூட்டமைப்புடன் இணைந்து கொரிய குடியரசு தூதரகம் நடத்திய பொலிஸ் பிரிவுகளுக்கு இடையிலான ஐ.ஜி.பீ சவால் கிண்ண போட்டியின் விருதுவழங்கும் நிகழ்வு கடந்த வாரம் கொழும்பில் உள்ள கொரியத் தூதரகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு கொரிய தூதுவர் எச்.ஈ. சன்துஷ் வூன்ஜின் ஹெயோங் மற்றும் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன தலைமையில் உயர் நிலைப் பொலிஸ் அதிகாரிகள் பலர் வரவேற்கப்பட்டனர். இதில் குழுநிலைப் போட்டி மற்றும் தனிப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் பிரிவுகளுக்கு பதக்கங்கள் மற்றும் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

## அரை இறுதிப் போட்டியில் கல்முனை லெஜன்ஸ்



மாளிகைக்காடு குறூப் நிருபர்

நிந்தவூர் சதாம் விளையாட்டுக் கழகம் நடத்தும் டி10 கிரிக்கெட் சமரின் அரை இறுதிப் போட்டி அண்மையில் நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை விளையாட்டு கழகத்திற்கும் கல்முனை லெஜன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கல்முனை லெஜன்ஸ் விளையாட்டு கழகம் முதலில் துடுப்பெடுத்தாடி 10 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலெடுத்தாடிய சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் 57 ஓட்டங்களுக்கு சுருண்டது.

தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com

# ஹேமாஸ் குழுமத்தின் சூழல் நிகழ்ச்சி நிரல் 2030 அறிமுகம்

## இலங்கையின் அரிய உயிரினங்களைப் பாதுகாக்க அர்ப்பணிப்பு




பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மை நிறுவனம் எனும் வகையில், இலங்கைக்கு பிரத்தியேகமான அம்சங்களை பராமரித்து பேண வேண்டிய உறுதியான நம்பிக்கையுடன், ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, தனது குழுமத்தின் சூழல் நிகழ்ச்சிநிரல் 2030 "ஹரித மெஹெவர" என்பதை அறிமுகம் செய்துள்ளது. நாட்டின் அரிய உயிரினங்களைப் பாதுகாப்பதற்கான இடையீடுகள் மற்றும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நீண்ட கால அர்ப்பணிப்பாக இது அமைந்துள்ளது.

சர்வதேச உயிரியல் பரம்பல் மையமாக அமைந்துள்ள இலங்கையில், 350 க்கும் அதிகமான அரியவகை உயிரினங்கள் காணப்படுகின்றன. இவற்றில் தாவரங்களும் விலங்குகளும் அடங்குகின்றன. எவ்வாறாயினும், மனிதனின் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளமை காரணமாக, இந்த அரிய வகை விலங்குகள் மற்றும் தாவரங்கள் பெரும் இடர்களுக்கு முகங்கொடுத்துள்ளன.

குழுமத்தின் அர்ப்பணிப்பு தொடர்பில் ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்லராஜா வில்சன் கருத்துத் தெரிவிக்கையில், "உண்மையில் இலங்கையின் நிறுவனம் எனும் வகையில், இலங்கைக்கு உரித்தான அனைத்து உயிரினங்களையும் பராமரித்து பாதுகாக்க வேண்டும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். அதனூடாக எதிர்காலத் தலைமுறையினருக்கும் நாம் கொண்டுள்ள இந்த செழுமையான சூழல் கட்டமைப்பின் பயனைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். எமது சூழல்சார் நிகழ்ச்சிநிரலினூடாக, விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் பங்காண்மைகளினூடாக சூழல் பாதுகாப்பு நடவடிக்கைககளை முன்னெடுத்தல், இயற்கை வளங்களை பொறுப்பு வாய்ந்த வகையில் பயன்படுத்தல், எமது செயற்பாடுகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் சூழலுக்கு ஆபத்தான பிளாஸ்ரிக் பயன்பாட்டை குறைத்தல் போன்றவற்றை முன்னெடுப்போம். இலங்கையில் பாதிப்புறக்கூடிய உயிரினங்களைப் பாதுகாக்கும் வகையில் எமது சகல இடையீடுகள் மற்றும் செயற்பாடுகள் அமைந்திருப்பது எமது எதிர்பார்ப்பாகும்." என்றார்.

இந்தப் பங்காண்மை தொடர்பில் வன ஜீவராசிகள் மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கத்தின் தலைவர் ஜெஹான் கனரெட்ன கருத்துத் தெரிவிக்கையில், "எமது உலகின் வனஜீவராசிகள் மற்றும் அவற்றின் பாதுகாப்பு தொடர்பான எதிர்காலம், மனிதர்களின் தங்கியுள்ளது. இலங்கையும் விதிவிலக்கானதல்ல. உலகெங்கும் வெப்பநிலை அதிகரிப்பு மற்றும் பாரதூரமான காலநிலை மாற்றம் போன்றன இடம்பெறும் நிலையில், நாம் கொண்டிருப்பதை பாதுகாக்க வேண்டியது முக்கியமானதாகும். WNPS உடன் ஹேமாஸ் கைகோர்த்து, அதிகளவு ஆபத்தை எதிர்நோக்கியுள்ள எமது உயிரினங்களை பாதுகாக்கும் திட்டத்தை முன்னெடுக்கின்றது. எம்மைப் பொறுத்தமட்டில் இது மிகவும் முக்கியமான படிமுறையாகும். ஹேமாஸ் போன்ற பாரிய கூட்டாண்மை நிறுவனங்கள் எதிர்கால தலைமுறையினரைக் கவனத்தில் கொண்டு இது போன்ற முக்கிய படிமுறைகளை முன்னெடுப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. எமது உலகைப் பாதுகாப்பதற்கான முதல் படியாக இதை ஏனைய நிறுவனங்கள் கவனிக்கும் என நான் எதிர்பார்க்கின்றேன்." என்றார்.

# e-commerce திறன்களை மேம்படுத்த SLT-MOBITEL உடன் இணைந்துள்ள HNB



புதிய ecommerce சந்தைகள் மற்றும் வாங்குபவர்களுடன் உள்ளூர் SMEகளை இணைக்கும், இலங்கையின் மிகவும் டிஜிட்டல் புத்தாக்கமான வங்கியான HNB PLC, SMEகளுக்கு புதிய ஆன்லைன் வர்த்தக தளமான Cochchi.lkக்கு இலவச அணுகலை வழங்க SLTMOBITEL உடன் கைகோர்த்துள்ளது.

புதிய ecommerce தளத்தில் நுழையும் போது, இரண்டு தொழில் நிறுவனங்களின் கூட்டாண்மை HNB SMEகளுக்கு கூடுதல் பலன்களை வழங்கும்.

இந்த கூட்டாண்மை தொடர்பில் இடம் பெற்ற விசேட நிகழ்விற்கு HNB பிரதிப் பொது முகாமையாளர் வாடிக்கையாளர் மற்றும் SME வங்கியியல், சஞ்சய் விஜேமான்ன, HNB உதவிப் பொது முகாமையாளர் SME, கைலைவாசன் இந்திரவாசன், SME தயாரிப்புகள் மற்றும் கூட்டாண்மைகளின் HNB தலைவர் நிலுகா அமரசிங்க, மற்றும் SLT தலைமை தகவல் மற்றும் டிஜிட்டல் அதிகாரி, திலக் கம்லத், SLT பொது முகாமையாளர். மாற்றம் திட்டங்கள், இஷாரி சிறிவர்தன, SLT பிரதிப் பொது முகாமையாளர் டிஜிட்டல் திட்டங்கள், தினேஷ் பெரேரா மற்றும் SLT சிரேஷ்ட முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) SME தயாரிப்பு அபிவிருத்தி, லால்வின் டி சொய்சா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த HNBஇன் உதவி பொது முகாமையாளர் SME, கைலைவாசன் இந்திரவாசன், "தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, இலங்கையில் வாழும் நாம் எமது பொருளாதாரத்தை புத்துயிர் பெறுவதற்கான புதிய வழிகளையும் வாய்ப்புகளையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

நமது ஏற்றுமதியை மேம்படுத்துவதிலும், நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருக்கும் நமது SMEக்களுக்கான புதிய சந்தைகளை அடையாளம் காண்பதிலும் கவனம் செலுத்துவது, நமக்கு மிகவும் தேவைப்படும் பணப்புழக்கத்தின் புதிய ஆதாரங்களை உருவாக்கும். SMEகளுடன் எப்போதும் பணிபுரியும் ஒரு வங்கியாக, அவர்களின் மாற்றத்தை ஆன்லைனில் எளிதாக்குவது அவசியம் என்று நாங்கள் நம்புகிறோம். இவ்வாறாக, எமது SME வாடிக்கையாளர்களுக்கு இந்த வாய்ப்பை வழங்குவதற்காக SLTMOBITEL உடன் இணைந்து கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்." என தெரிவித்தார்.

# 5G இலிருந்து 6G செல்ல 5.5G அவசியம்: Huawei நிறுவனத்தின் Dr. Wen Tong



அடுத்த தலைமுறை கையடக்கத் தொலைபேசி வலையமைப்புகள் (Next Generation Mobile Networks NGMN) கூட்டணியினால் நடத்தப்பட்ட 2022 தொழில்துறை மாநாடு மற்றும் கண்காட்சி (Industry Conference & Exhibition IC&E) இல், 'Bridging 5G to 6G' (5G இலிருந்து 6G இற்கான பாலம்) எனும் தலைப்பில் Huawei நிறுவனத்தைச் சேர்ந்த, Huawei Wireless இன் CTO ஆன Dr. Wen Tong ஒரு முக்கிய உரையை நிகழ்த்தினார். அவர் தனது உரையில், 5G ஆனது 6G ஆக பரிணமிப்பதற்காக உதவக் கூடிய உந்து சக்திகள் மற்றும் திட்டங்கள் தொடர்பில் விளக்கினார். இந்த பரிணாமத்தை ஏற்படுத்த, 5.5G எனும் ஒரு அத்தியாவசியமான படி அவசியாகும் என்று அவர் இதன்போது குறிப்பிட்டார்.

புதிய திறன்களை வழங்க 5G இலிருந்து 5.5G இற்கு புதிய சேவைகள் செயற்படுத்துகின்றன. உலகம் முழுவதும் 5G தற்போது வளர்ச்சியடைந்து வருகிறது. இதில் ஒவ்வொரு 10 ஆயிரம் பயனர்களுக்கும் சராசரியாக 40 அடிப்படை வலையமைப்பு நிலையங்கள் கிடைக்கின்றன. சீனாவில், 5G ஆனது 30 இற்கும் மேற்பட்ட நேரடி தொழில்துறைகளுக்கு சேவை செய்கின்றன. 2021 ஆம் ஆண்டில் 1.3 ட்ரில்லியன் டொலர் பெறுமதியான பொருளாதார உற்பத்தியை அது நேரடியாக உருவாக்கியுள்ளது. வளர்ந்து வரும் 2C மற்றும் 2B மென்பொருள்களுக்கு 5G திறன்களில் மேலும் முன்னேற்றங்கள் அவசியமாகும். இது 5.5G இற்கான பரிணாம தேவையை உருவாக்குகிறது. இது மேம்படுத்தப்பட்ட மொபைல் புரோட்பேண்ட் (eMBB), ultrareliable lowlatency communication (URLLC), Massive MachineType Communications (mMTC) ஆகியவற்றின் மேம்பாடுகள் மற்றும் sensing, passive IoT, positioning, intelligence ஆகியவற்றுக்கான புதிய திறன்களால் வரையறுக்கப்படுகிறது. இவற்றின் மூலம், 5.5G ஆனது 10 Gbps தரவிறக்க வேகம், 1 Gbps தரவேற்ற வேகத்தையும், 100 பில்லியன்மட்ட இணைப்புகள், சார்பு நுண்ணறிவு, 5G யின் புதிய பயணத்தை ஆதரிக்கும்.

# ஊழியர்களை ஊக்குவித்து ஈடுபாட்டைப் பேணுவதற்காக பொழுதுபோக்கு நிலையத்தை அறிமுகம் செய்யும் SLT–MOBITEL

## சொத்துக்கள் பயன்பாட்டை முழுத்திறனுடன் பயன்படுத்துவதற்கான ஒரு படியாக அமைந்துள்ளது

ஊழியர்களை ஊக்குவித்து, ஈடுபாட்டைப் பேணும் நோக்குடன், தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL, தனது பன்நோக்கு பொழுது போக்கு நிலையத்தை, கட்டான, பொத்தோடே பகுதியில் அண்மையில் நிறுவியுள்ளது.

SLTMOBITEL இன் உரிமையாண்மையின் கீழான பகுதியில் இந்த பொழுது போக்கு நிலையம் அமைந்துள்ளது.

இரண்டு ஏக்கர் பகுதியில் அதிகாரிகளுக்கான தங்குமிடப்பகுதி மற்றும் 40 பேர்ச் பகுதியில் பரந்த விளையாட்டு மைதானம் ஆகிய இரு பகுதிகளை இந்த நிலையம் கொண்டுள்ளது. 1.75 ஏக்கர் பகுதியில் சிற்றூழியர்களுக்கான தங்குமிட வசதிகளையும் கொண்டுள்ளது.

முன்னர் இந்தப் பகுதி, SLT அதிகாரிகளின் தங்குமிடமாக காணப்பட்டதுடன், தொற்றுப் பரவல் காலப்பகுதியில் ஊழியர்களுக்கான கொவிட் சிகிச்சை நிலையமாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையத்தின் அறிமுக நிகழ்வில் குழும தவிசாளர் ரொஹான் பெர்னான்டோ, குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன, பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க (SLT), சந்திக விதாரென – பிரதம நிறைவேற்று அதிகாரி (மொபிடெல்) மற்றும் SLTMOBITEL இன் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

தரம் வாய்ந்த பொழுது போக்கு அம்சங்கள், அனுபவங்கள் மற்றும் வசதிகளை பெற்றுக் கொடுத்து, சமூகமாக வளர்ச்சியை எய்தும் நோக்கில் SLTMOBITEL, பன்நோக்கு பொழுது போக்கு நிலையத்தை ஊழியர்களுக்கு பரந்தளவு சேவைகளை உள்ளடக்கியதாக, எதிர்காலத்தில் மேலும் மேம்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளது.

இந்த நிலையத்தை நிறுவியிருந்ததன் பிரதான நோக்கம், SLTMOBITEL ஊழியர்களுக்கு பரந்தளவு வசதிகளை வழங்கி, தமது நலன்புரிச் செயற்பாடுகளை விஸ்தரிப்பதுடன், ஒரு சூழலில் வெளியக பயிற்சிகளை சௌகரியமாக முன்னெடுக்க வசதியளிப்பதாக அமைந்துள்ளது.

இந்த நிலையம் வெளியக நிகழ்ச்சிகளையும் முன்னெடுக்கும். சொத்து கொள்ளளவை முழுமையாக எய்துவதை அடிப்படையாகக் கொண்ட SLTMOBITEL இன் நோக்கத்தின் பிரகாரம் இந்த நிலையம் அமைந்திருக்கும். பயிற்சி தொழிற்பாட்டு செலவீனங்களைக் குறைத்து இல்லாமல் செய்வதனூடாக நீண்ட கால செலவுக்குறைப்பை ஏற்படுத்துவதுடன், வெளியக வளாகம் மற்றும் நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதனூடாக மேலதிக வருமானமீட்டுவதையும் இலக்காகக் கொண்டுள்ளது. பாரிய காணிப் பகுதியினூடாக, தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநருக்கு, சூழலுக்கு நட்பான செயன்முறைகளினூடாக நிலைபேறாண்மையை ஊக்குவிக்கக்கூடியதாக இருக்கும்.

நிலையத்துக்கான எதிர்கால வசதிகளில் விடுமுறை பங்களா, சகல வசதிகளும் படைத்த ஊழியர்களுக்கான பொழுது போக்கு நிலையம், SLT பயிற்சி நிலையத்தின் நிகழ்வுகளை முன்னெடுக்கும் ஆற்றல் மற்றும் உள்ளக மற்றும் வெளியக விளையாட்டு போட்டித் தொடர்களுக்கான களம் போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும்.

மொத்தத்தில், இந்த நிலையத்தினூடாக ஊழியர்களின் நலன்புரி, ஊக்குவிப்பு மற்றும் விருந்தினர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த அனுபவங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

# யாழ் குடாநாட்டில் விசேட ஊக்குவிப்பு பிரசாரங்களை நடத்தியது கொமர்ஷல் வங்கி





கொமர்ஷல் வங்கியின் புதிய கணக்குகள் மற்றும் வெளிநாட்டுப் பணப்பரிமாற்றங்களை ஊக்குவிக்கும் வகையில் வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகள் மற்றும் பரிசுகள் வழங்கும் ஊக்குவிப்பு திட்டம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாவை முன்னிட்டு இடம்பெற்றது.

ஒரு வார காலப் பிரச்சாரத்தின் போது, 'Vibe' இளைஞர் சேமிப்புக் கணக்கு, DotCom இளைஞர் சேமிப்புக் கணக்கு மற்றும் வெளிநாட்டு நாணயத்தில் தங்கள் குழந்தைகளுக்கு சேமிக்க. பெற்றோர், பாதுகாவலர்களை ஊக்குவிக்கும் வகையில் சமீபத்தில் தொடங்கப்பட்ட 'அருணலு" வெளிநாட்டு நாணய சிறுவர் சேமிப்புக் கணக்கு உட்பட, அதன் கணக்கு வகைகள், சலுகைகள் குறித்து வங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

புதிய 'Vibe'மற்றும் DotCom கணக்கு வாடிக்கையாளர்களுக்கு 'Vibe' மற்றும் DotCom டெபிட் கார்டுகள் இலவசமாக வழங்கப்பட்டன. வெளிநாட்டுப் பணம் அனுப்புதல் தொடர்பான விபரங்கள் மற்றும் சேவைகளுக்கான அணுகலுக்காக 'ComBank RemitPlus' ஐப் பயன்படுத்துவதன் நன்மைகள், கணக்கிற்கு பணம் அனுப்புதல், கணக்குகளில் வரவு வைக்கப்படும் பணப்பரிமாற்றங்களுக்கான இலத்திரனியல்ரசீதுகளைப் பெறுவதற்கான வசதி மற்றும்ComBank Digital இன் பயன்பாடுகள் குறித்தும் வங்கி கவனம் செலுத்தியது.

சமூக ஊடகங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் வங்கியின் தற்போதைய விளம்பரங்கள் மற்றும் சலுகைகளின் சாத்தியம் பற்றி யாழ்பாணக் குடாநாட்டு வாடிக்கையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற திருவிழாக்களில் ஒன்றான நல்லூர் திருவிழாவில் பங்குபற்றிய பெருமளவான மக்களை சென்றடைய முடிந்ததாக வங்கி தெரிவித்துள்ளது.

# 60 வருட நிறைவை கொண்டாடும் பேபி செரமி




Hemas Manufacturing இனது முதன்மையான வர்த்தக நாமமும் இலங்கையில் மிகவும் விரும்பப்படும் குழந்தை பராமரிப்பு வர்த்தக நாமமுமான பேபி செரமி (Baby Cheramy), எமது தேசத்தின் சமூகங்கள் முழுவதிலும் உள்ள குழந்தைகளை தலைமுறை தலைமுறையாக பேணிப் பாதுகாத்து, அதன் 60 வருட நிறைவைக் கொண்டாடுகிறது. வர்த்தக நாமத்தின் ஆறு தசாப்த காலப் பயணத்தில், ஈவ் டி கொலோன் (Eau de cologne) உற்பத்தியிலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்து பரந்துபட்ட குழந்தை பராமரிப்பு உற்பத்திகளை தயாரித்து வழங்கும் ஒரு முழுமையான உள்ளூர் வர்த்தகநாமமாக அது வளர்ந்துள்ளமை பிரமிப்பளிக்கிறது . இன்று, பேபி செரமி இலங்கையின் குழந்தை பராமரிப்பு தொடர்பான உற்பத்திச் சந்தையில் நம்பர் 1 குழந்தை பராமரிப்பு வர்த்தக நாமமாக சந்தையில் முன்னணியில் இருந்து வருகிறது. அதன் தயாரிப்புகள் மற்றும் இதர உற்பத்திப் பொருட்கள் குழந்தைகளுக்கு பாதுகாப்பானதும், மிருதுவானதும், மென்மையானதுமான பராமரிப்பை வழங்கும் பொருட்டு பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இத்தயாரிப்புகள் இலங்கையில் உள்ள அனைத்து மூலை முடுக்கெங்கும், அனைத்து சமூகங்களிடையேயுமான குடும்பங்களைச் சென்றடைவதோடு, மாலைதீவு, கனடா, இந்தியா ஆகிய நாடுகளுக்கும் அவை ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

ஒரு பிரபல அடையாளச் சின்னமான பேபி செரமி ஈவ் டி கொலோன் 1962 இல் குழந்தை பராமரிப்பு தயாரிப்புகள் சந்தையில் இல்லாத ஒரு காலப்பகுதியிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வர்த்தகநாமத்தின் முக்கிய பெறுமானங்களாக காணப்படும் மென்மை, அன்பான கவனிப்பு, நம்பகமான தரம் ஆகியவற்றைப் இது பிரதிபலிப்பதன் காரணமாக, பெரும்பாலான இலங்கைப் பெற்றோருக்கு தற்போதும் விருப்பமான குழந்தைகளுக்கான வாசனைத் திரவியமாக இது இருந்து வருகின்றது.

பேபி செரமி வர்த்தகநாமத்தின் பாரம்பரியம் தொடர்பில் Hemas Holdings நிறுவனத்தின் தலைவர் Husein Esufally கருத்துத் வெளியிடுகையில், "அன்பு மற்றும் நம்பிக்கையுடன் கட்டமைக்கப்பட்ட பேபி செரமி கடந்து வந்த 60 ஆண்டுகளை நாம் கொண்டாடும் இத்தருணமானது, எமக்கு பெருமையான தருணமாக உள்ளது. தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை, குறிப்பாக குழந்தைப் பருவத்தில் கவனித்துக் கொள்ளவும், ஆறுதல் படுத்தவும் உதவும் தொலைநோக்குப் பார்வையுடன் எமது பயணம் ஆரம்பித்தது. இப்பயணத்தை நாம் திரும்பிப் பார்க்கும்போது, இந்த நோக்கத்திற்காக, வர்த்தகநாமம் உண்மையாக இருந்து செயற்பட்டு வருவதில் நான் பெருமையடைகிறேன். அது அவர்களுக்கு உயர்தர தயாரிப்புகளை வழங்குவதன் மூலம் மாத்திரமன்றி, இலங்கையிலுள்ள தாய்மார்களுக்கு சந்ததி சந்ததியாக, ஆரம்ப குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் மேம்பாட்டின் முக்கியத்துவத்தை கற்பிப்பதிலான எமது பங்களிப்பினூடாகவும் இதனை மேற்கொண்டு வந்துள்ளோம். பல ஆண்டுகளாக, தாய்மார்களின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெறுவதற்காக, தொடர்ச்சியான புத்தாக்கங்களினால் எமது தயாரிப்புகளின் பாதுகாப்பு மற்றும் தரத்தை மேம்படுத்தி வருகின்றோம்." என்றார்.

# ஜெயபாலனுடனான இலக்கிய சந்திப்பு











இலங்கைக்கு வருகைதந்துள்ள கவிஞர் ஜெயபாலனுக்கும் இலக்கிய ஆர்வலர்களுக்குமான சந்திப்பு (22) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 'தாருஸ்ஸலாம்' தலைமையகத்தில் நடைபெற்றபோது..





# குருந்தூர் மலை, திருகோணேஸ்வரம் பகுதிகளில் காணி அபகரிப்பு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

## தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி சுமந்திரன் சபையில் வலியுறுத்து



**லோரன்ஸ் செல்வநாயகம்**

குருந்தூர் மலையில் நீதியைப் பாதுகாக்க முற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் தொல்லியல் திணைக்களம் தற்போது இனவாத திணைக்களமாக மாறி வருவதாகவும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ சுமந்திரன் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். நீதிமன்ற கட்டளையை மீறியவர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்து நீதியை பாதுகாக்க முற்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் இடம்பெற்ற தொலைக்காட்சி கூட்டுத்தாபன திருத்த சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்..

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய

அவர்,

குருந்தூர் மலையில் எமது கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். தொல்லியல் திணைக்களம் சட்டவிரோதமாக அங்கு கட்டிடங்களை நிர்மாணித்து வரும் நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்த போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். தொல்லியல் திணைக்களம் மக்களின் காணிகளை மிக மோசமான முறையில் கையகப்படுத்தி வருகிறது. அது சம்பந்தமாக பல தடவைகள் பாராளுமன்றத்திலும் வெளியிலும் கருத்துக்களை முன் வைத்துள்ளோம். 600 ஏக்கர் காணிகளை அபகரிக்கின்ற இந்த முயற்சிகள் தடுக்கப்பட வேண்டும் என ஆர்ப்பாட்டம் செய்யும் போதே கைது செய்யப்படுகின்றார்கள். ஜனாதிபதியுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு நடத்திய சந்திப்பின் போது அது தொடர்பில் நாம் அவரது கவனத்திற்கு கொண்டு வந்தோம். திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு தாம் உடனடியாக அறிவிப்பதாக அவர் உறுதியளித்திருந்தார். அதே போன்று கிழக்கில் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தை அபகரிக்கும் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. திருகோணேஸ்வரம் இலங்கையிலுள்ள பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்று. இது மிகவும் பழமை வாய்ந்தது.

# திருகோணேஸ்வரர் ஆலய பகுதியில் ஆக்கிரமிப்பு நடவடிக்கை உடன் நிறுத்தப்பட வேண்டும்

## ஸ்ரீதரன் எம்பி சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



திருகோணமலை திருகோணேஸ்வரர் ஆலய பகுதியில் திட்டமிட்ட ஆக்கிரமிப்பு இடம் பெறுவதாகவும் அதனை உடனடியாக தடுத்து நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி ஸ்ரீதரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அது தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்த அவர் சபையில் "நிரை கழல் அரவம் சிலம்பு ஒலி அலம்பும் நிமலர், நீறு அணி திருமேனி" என்னும் திருக்கோணேஸ்வரர் ஆலயம் தொடர்பான தேவாரத்தை சபையில் உரத்துப் பாடி தமது விவாதத்தை ஆரம்பித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் திருகோணமலை திருகோணேஸ்வரம் ஆலய பகுதி காணி தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் தேவாரத்துடன் விவாதத்தை ஆரம்பித்தார்.

தனது உரையை ஆரம்பிக்க முன்னர் "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற மாணிக்கவாசகரின் அருள்வாசகத்தினை குறிப்பிட்ட பின்னரே

"நிரை கழல் அரவம் சிலம்பு ஒலி அலம்பும் நிமலர், நீறு அணி திருமேனி"என்ற திருகோணேஸ்வரர் ஆலயம் தொடர்பான தேவாரத்தை உரத்துப்பாடிவிட்டு, திருகோணேஸ்வர ஆலயத்தின் வரலாறு அங்கு தற்போது இடம்பெறும் ஆக்கிரமிப்புக்கள் தொடர்பில் அவர் பிரிவான உரையொன்றை நிகழ்த்தினார்.






இலங்கை வானொலி தென்றல் FM நேரலையாக வழங்கிய" மதுர கீதங்கள் " நிகழ்வு, நிலைய சமரக்கோன் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இங்கு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்க சிரேஷ்ட அறிவிப்பாளர்கள் இருவரை விருது வழங்கி கௌரவித்தார். இதில் கலைக்கமல் சக பாடகி மொறின் ஜெனற்றுடன் இணைந்து பாடினார். இந்நிகழ்வில் விசாரத ரத்னம் ரத்னதுரை முதல் முதலாக புகழ் பூத்த நம்நாட்டு பொப்பிசைப் பாடலொன்றை பாடவைத்தார். செந்தூரன், அயாஸ் சவாஹிர், ரத்னம் ரத்னதுரை, ஆனந்தன், ரூபன், மொஹமட் ஸியாத் இசையால் அசத்தினார்கள். பிரபல இசையமைப்பாளர் கலாபூஷணம் மகேந்திரன் இதனை ஏற்பாடு செய்திருந்தார். மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. கலை விரல்களால் வித்தைகாட்டி வியக்கவைத்தார் விசாரத ரத்னம் ரத்னதுரை.

# உலக விவகாரங்களில் இந்தியா துணிச்சலாக முடிவெடுத்து வருகிறது

## அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டு



இந்திய பிரதமர் நரேந்திர மோடி உஸ்பெஸ்கிஸ்தான் சமர்கண்ட் நகரில் நடைபெற்ற ஷங்காய் ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு சீன, ரஷ்ய அதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதையும் ரஷ்யாவின் விளாடிவொஸ்டொக் நகரில் இடம்பெற்ற கிழக்கு பொருளாதார கூட்டமைப்பை இந்தியப் பிரதமர் வரவேற்று பேசியிருப்பதையும் இந்திய வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை வெளிப்படுத்துவதாக உள்ளது என அவதானிகள் கருதுகின்றனர்.

கிழக்கு லடாக்கில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தான் கைப்பற்றி வைத்திருந்த பகுதியை விட்டு பழைய எல்லைக்கே திரும்பிச் செல்ல சீனா இணக்கம் தெரிவித்திருப்பதை இதற்கு உதாரணமாக சுட்டிக்காட்டும் அவதானிகள், சீனாவில் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டில் கலந்து கொள்வதை முன்னர் மோடி தவிர்த்துவிட்டு அமெரிக்கா தலைமையிலான குவாட் உச்சி மாநாட்டில் பங்கெடுப்பதற்காக டோக்கியோ சென்றதை இதனுடன் ஒப்பிட்டு, தற்போது இந்திய மனநிலையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாக கூறியுள்ளனர்.

உக்ரைன் யுத்தத்தை ஆரம்பிப்பதற்காக ரஷ்யாவை தண்டிக்க முனையும் அமெரிக்க தரப்பு ரஷ்ய மசகு எண்ணெய் மீது விதித்திருக்கும் விற்பனைத் தடையை இந்தியா பொருட்படுத்தாமல் இந்திய ரூபா – ரஷ்ய ரூபள் எண்ணெய் வர்த்தகத்தை முன்னெடுப்பதையும் இது தொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த இந்திய பெற்றோலியத்துறை அமைச்சர் ஹர்தீப்சிங் பூரி, அமெரிக்க தடைக்கு இணங்க வேண்டிய அவசியம் கிடையாது என்று தெரிவித்திருப்பதையும் இந்திய மன மாற்றத்துக்கு உதாரணமாக குறிப்பிடுகின்றனர். இக்கொள்கையை மத்திம பாதை என்றும் சுதந்திரமாக முடிவெடுக்கும் துணிச்சல் என்றும் குறிப்பிடும் அவதானிகள், ஐ.நா. பாதுகாப்பு சபையில் உக்ரைன் தொடர்பான ரஷ்யாவுக்கு எதிரான தீர்மானங்களில் இந்தியா பிரசன்னமாக இருக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டுகின்றனர்.

# கிழக்கு லடாக்கில் எல்லை மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை மேலும் விரிவுபடுத்த இந்தியா விருப்பம்



கடந்த 2020ஆம் ஆண்டு கிழக்கி வடாகைக்கில் இந்திய மற்றும் சீன இராணுவ வீரர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலையடுத்து ஏற்பட்ட நெருக்கடி நிலை, தொடர்ச்சியாக இராணுவ மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளையடுத்து ஒரு சமரசத்துக்கு வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிததுள்ளன. பொயின்ட் 15 என அழைக்கப்படும் கொக்ரா வென்னீருற்று பகுதிகளில் இரு பக்கத்து படையினரும் மோதல் தவிர்ப்பை கடைபிடிக்கவும், தற்காலிக காவல் நிலையங்களை அகற்றவும், ட்ரோன் கண்காணிப்பை கைவிடவும் இணக்கம் காணப்பட்டுப்பட்டுள்ளது. இப்பகுதியல் சூனியப் பிரதேசமும் உருவாக்கப்பட்டுள்ளது.

கிழக்கு லடாக் எல்லைப் புறமாக கோக்ரா, கல்வாரி சமவெளி மற்றும் மென்கொங் கைலாஷ் ஆகிய மூன்று பிரதேசங்களில் மோதல் தவிர்ப்பின் பொருட்டு இராணுவ சூனியப் பிரதேசங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது குக்ராங் நால்லா பகுதியிலும் இராணுவ சூனியப் பிரதேசம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் இருநாட்டு எல்லைப் படையினர் மத்தியில் ஏற்பட்ட கைகலப்பில் இருபது இந்திய படையினரும் சீன இராணுவத்தினரும் உயிரிழந்தனர். இறந்தவர் எண்ணிக்கையை சீனா வெளியிடவில்லை. இதையடுத்து இரு நாட்டு இராணுவ தலைமைகளுக்கு இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னரேயே தற்போது மோதல் தவிர்ப்பு உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக இந்திய பாதுகாப்பு தரப்பு தெரிவித்துள்ளது.

கிழக்கு லடாக்கில் மோதல் தவிர்ப்பு நிலை உருவாக்கப்பட்டிருப்பதையடுத்து கிழக்கு லடாக்கின் மற்றொரு எல்லைப்பகுதியான டெப்சாங் மற்றும் டெம்கொக் பிரதேசங்களில் மோதல் தவிர்ப்பு உடன்பாடுகளை எட்டும் முயற்சிகளில் ஈடுபட முடியும் என இந்திய பாதுகாப்பு தரப்பு கருதுவதாக தெரியவருகிறது.